வருடச் சந்தா — போஸ்டேஜ் உள்பட ரூ. 4

[ஸத்க்ரந்தப் ப்ரகாசக ஸபையில் மெம்பர்களாகச் சேர்ந்தவர்கள்
இதற்காகத் தனிச் சந்தா செலுத்தவேண்டா]

# ஸ்ரீராமாநுஜன்.

**ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை**

**— 5 —**

எனக்குற்ற செல்வ மிராமாநுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன் மன்னியசீர்
தனக்குற்றவன்ப ரவன் திருநாமங்கள் சாற்றும், என்பா
வினக்குற்றங் காணகில்லார் * பத்தியேய்ந்த வியல்விதென்றே.

மதராஸ்

**ஸத்கிரந்த பிரகாசன சபையின் வெளியீடு**

கிடைக்குமிடம்: P.B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

http://acharya.org

5 ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜன்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

[மதராஸ் ஸச்சரித்ர ப்ரகாசந ஸபையின் வெளியீடு].

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

| முதல் தொகுதி | 10—1—1949 | 5-வது பகுதி |
|---|---|---|

## எம்பெருமானார் ஸ்ரீஸூக்திப் பெருமை

—"அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்"—

சென்ற ஸ்ரீராமாநுஜனில் "**சமிதோதய சங்கராதி கர்வ:**" என்ற யதிராஜ ஸப்ததி ஸ்ரீஸூக்தியைக் கொண்டு பகவத் ராமாநுஜ மஹிமார்ணவத்தில் அவகாஹித்த நாம் அந்த ச்லோகத்தில் மூன்றாவது பாதத்தினால் காட்டப்பட்ட விசேஷத்தை இவ்விதழில் அநுபவிப்பதாகக்கூறி விட்டிருந்தோம். அதை இப்போது ஒருவாறு அநுபவிக்கிறோம். "**அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்**" என்கிற மூன்றாவது பாதத்தினால் ஸ்ரீராமாநுஜர் வேதத்திற்குப் பிறர் கூறின அபார்த்தங்களைத் தள்ளி உண்மைப் பொருள்களை யுரைத் தருளினதாகத் தெரிவிக்கப்படுகிறது. எந்த ச்ருதி வாக்யத்திற்கு எவ்விதமாகப் பிறர் ஏலாத பொருளைக்கூறினர்? அங்கு எம்பெருமானார் எவ்விதமான அர்த்தங்கூறி யருளினர்? என்பதைத் தெரிந்துகொள்ள அன்பர்கள் மிக ஆவலோடு இருப்பார்கள். ஈண்டு ஒரு விஷயத்தை யெடுத்துக் கொண்டு விவரிக்கின்றோம்:—

உபநிஷத்துக்களில் சிலவாக்கியங்களில் ஒருதத்துவமே உள்ளதாகவும் பலதத்துவங்கள் இல்லையென்பதாகவும் பேசப்பட்டுள்ளது. ***நேஹ நாநாஸ்தி கிஞ்சந*** என்பது ஒரு ச்ருதி வாக்யம். '**ந இஹ நாநா அஸ்தி கிஞ்சந**' என்று பதம் பிரியும். இஹ **நாநா கிஞ்சந நாஸ்தி** இவ்வுலகில் பலவென்று சொல்லக்கூடியது எதுவுமில்லை என்பது இந்த ச்ருதி வாக்கியத்தின் பொருள். "**ஏகமேவ அத்விதீயம்**" என்கிற மற்றொரு ச்ருதி வாக்யமும் மேற்கூறிய பொருளை (அதாவது, பலதத்துவங்கள் கிடையாது, ஒரே தத்துவந்தானுள்ளது என்னும் பொருளை) த் திடப்படுத்தியுள்ளது. இப்படி பல வாக்கியங்கள் உபநிஷத்துக்களில் உள்ளன வென்று வைத்துக் கொள்வோம்.

http://acharya.org

அந்த உபநிஷத்துக்களிலேயே மற்றுஞ்சிலவிடங்களில் **பல தத்துவங்கள் உள்ளன** வென்று காட்டுகின்ற வாக்கியங்களையும் காணுகின்றோம்; அப்படிப்பட்ட வாக்கியங்களில் சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்:—

(1) ***க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம்ஹர: க்ஷராத்மாநௌ ஈசதே தேவஏக:*** இதுவொரு ச்ருதி வாக்கியம். இதனால், அசேதனப்பொருளும் சேதநப்பொருளும் இவ்விரண்டுக்கும் இறைவனானவொரு பகவானும் ஆகமூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்லப்படுகிறது.

(2) ***ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜா வீச நீசௌ***- இதுவும் ஒரு ச்ருதி வாக்கியம். இதனாலும், ஒரே தத்வமல்ல, வெவ்வேறுபட்ட தத்துவங்களுண்டென்பது காட்டப்படுகிறது.

(3) ***த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்திஅநச்நந்நந்யோ அபிசாகசீதி.*** -இதுவும் அப்படிப்பட்ட மற்றொரு ச்ருதி வாக்கியம். இரண்டு பக்ஷிகள் ஒன்றோடொன்று இணங்கிக் கொண்டு ஒரு விருக்ஷத்தில் (அசேதநமான சரீரத்தில்) அணைந்துகிடக்கின்றனவென்றும், அவ்விரண்டு பறவைகளுள் ஒரு பறவையானது (ஜீவாத்மா) புண்ய பாப ரூபகரும பலன்களை இனிதாக உண்டு களிக்கின்றதென்றும், மற்றொரு பறவையானது (பரமாத்மா) ஒன்றுமுண்ணாமல் மிக விளங்குகின்றதென்றும் இந்தச்ருதி வாக்கியத்தினால் கூறப்படுகின்றது. இதனால் சேதந-அசேதந ஈச்வரர்களாகிற மூன்று தத்துவங்களுள்ளன வென்பது தெளிவாக விளங்கிற்று. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களும் உபநிஷத்துக்களில் பலவுள்ளன வென்று வைத்துக் கொள்வோம்.

பல தத்துவங்கள் கிடையாது, ஒரே தத்துவந்தானுள்ளதென்று கூறுவதாக முதலில் எடுத்துக்காட்டப்பட்ட ச்ருதி வாக்கியங்களானவை **அபேதச்ருதி** என வழங்கப் பெறும்; அத்வைத ச்ருதி யென்பதும் மறு பெயர். பிறகு, பல தத்துவங்களுள்ளன வென்று கூறுவதாக எடுத்துக்காட்டப்பட்ட ச்ருதி வாக்கியங்களானவை **பேத ச்ருதி** அல்லது த்வைதச்ருதி யென்று வழங்கப்பெறும். இவை ஒன்றோடொன்று முரண்படுகிற வார்த்[தை]களாக இருக்கின்றன. 'பல தத்துவங்கள் கிடையா, ஒன்றேதான்' என்று ஓரிடத்தி[ல்] சொல்லுவதும் பலதத்துவங்களுண்டென்று பிறிதோரிடத்தில் விவரித்துக் காட்டிக் கூறுவதும் பரஸ்பரம் முரண்பட்டதேயன்றோ. ஒன்றுதான் தத்துவம் என்று சொல்லி விட்டால் பல தத்துவங்களுள்ளனவாகச் சொல்வதுகூடாது; பலதத்துவங்கள் உண்டென்றால் ஒன்றே தத்துவமென்பது பொருந்தாது; ஆகவே முரண்பாடு மூதலிக்கப்பட்டதாயிற்று.

"வேத நூல் ஓதுகின்றதுண்மையல்லதில்லை மற்றுரைக்கிலே" என்ற திருமழிசையாழ்வார் திருவாக்கின்படி யதார்த்தமே யுரைக்கவல்ல உபநிஷத்துக்கள் பரஸ்பர விருத்தமாகவோ அஸங்கதமாகவோ சொல்லமாட்டாவாதலால் மேலே யெடுத்துக் காட்டின ச்ருதி வாக்கியங்களை முரண்பாடு சிறிதுமின்றியே ஸங்கதமாகப் பொருந்த விடுகிற வழி என்ன? என்பது ஆராயப்படவேண்டும். ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள், ஒரு தத்வமே யுள்ளதென்று ஓதுகின்ற அத்வைத ச்ருதிகளாக நாம்மேலே எடுத்துக்காட்டிய அபேத ச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு ஒன்றேதான் தத்துவமென்று நிர்வஹித்தார்கள், பல தத்துவங்

http://acharya.org

களுண்டென்றோதுகின்ற த்வைத ச்ருதிகளாக நாம் மேலே யெடுத்துக் காட்டிய பேத ச்ருதிகளை ஒருவாறு ஔபசாரிகமாக நிர்வகிக்கலாமென்றும் அவர்கள் கருதினார்கள். சேதனப்பொருள்களும் அசேதனப்பொருள்களுமுள்ளனவாகத் தோற்றுவது மாயையின்தோற்றமேயாதலால் அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேத ச்ருதிகள் அவதரித்ததாகநிர்வஹித்துவிடலாமென்பது இவ்வத்வைதிகளின் கருத்து. ஆகவே த்வைத ச்ருதிகளைத்தள்ளி அத்வைத ச்ருதிகளையே முக்கியமாகக்கொண்டபடியால் இவர்கள் அத்வைதிகளென்று வழங்கப்படுகிறார்கள். பேதம் மாயைத்தோற்றம் என்கிறார்களாதலால் மாயாவாதிகளென்றும்வழங்கப்படுகிறார்கள்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் த்வைத ச்ருதிகளான பேதச்ருதிகளை முக்கியமாகக்கொண்டு அத்வைத ச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்று கருதுகின்றார்களாதலால் அவர்கள் (மத்வாசார்ய ஸம்பிரதாயஸ்தர்கள்) **த்வைதிகள்** என வழங்கப்படுகின்றார்கள்.

ஆக மேற்கூறிய (அத்வைதம் த்வைதம் என்கிற) இரண்டு ஸம்பிரதாயங்களிலும் ஒருவகையான உபநிஷத் வாக்கியங்கள் ஒதுக்கப்பட்டு ஒருவகையான உபநிஷத் வாக்யங்களே முக்கியமாகக் கொள்ளப் படுகின்றன வென்பது தேறுகின்றது. சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்கள் ஸத்தியமாகவுள்ளன வென்கிற அர்த்தம் ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று. ஒரேதத்துவந்தானுள்ளதுஎன்கிற அர்த்தம் ஸ்ரீமத்வாசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச்சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று.

அத்வைதிகள் சிலச்ருதி வாக்கியங்களைத்தள்ளவும்,த்வைதிகள் சில ச்ருதிவாக்கியங்களைத் தள்ளவும் நேர்ந்திருக்கின்றதென்பதை இதுவரையில் விவரித்தோமானோம். இனி, ஒரு ச்ருதி வாக்கியத்தையும் தள்ளாமல் உபநிஷத் வாக்கியங்களெல்லா வற்றையுமே ஸமரஸப்படுத்தி ஒன்றையு மொதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினவர்கள் நம் பூருவாசாரியர்கள்; அவர்களில் தலைவர் பகவத் ராமாநுஜர். ஒரே தத்துவந்தானுள்ளது என்று தெரிவிக்கிற ச்ருதி வாக்யங்களையும், பல தத்துவங்களுண்டென்று தெரிவிக்கிற ச்ருதி வாக்யங்களையும் எப்படி பொருந்தவிடமுடியுமென்னில்; நம் பேராசிரியர் எப்படி பொருந்தவிட்டிருக்கிறாரென்பது இனி உபாதிக்கப்படுகிறது.

உலகத்தில் ஒருவஸ்துவைப் பல வென்றும் ஒன்றே என்றும் சொல்வதற்குப் பொருத்தமுண்டு. உதாஹரணமாக ஒரு கடியாரத்தை யெடுத்துக் கொள்வோம்; அஃது ஒன்றா பலவா? என்று கேட்டால், கையில் ஒரு கடியாரமே உள்ளதாகையால் ஒன்றே என்று சொல்லுவோம். ஆனால் அதை நாம் ஊன்றிப்பார்க்குங்கால் அதில் பலபல வஸ்துக்கள் அவயவங்களாக (உறுப்புகளாக)ச் சேர்ந்திருப்பது புலப்படாமற் போகாது. பல அவயவங்களோடு கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமேயல்லது ஒருவஸ்துவுக்கு மேல் வேறொருவஸ்துவே இதில்கிடையாதென்று சொல்வதாக ஒருகாலும்ஏற்படாது. இப்படி கடியாரமென்கிற ஒருவஸ்துவேயல்ல; உலகிற்காணும் எந்தவஸ்துவையெடுத்துக்கொண்டு

http://acharya.org

பார்த்தாலும் இப்படி ஒருவிதத்தில் ஐக்கியமும் மற்றொரு விதத்தில் அநேகத்வமும்தோன்றியே தீரும். படுக்கை, தலையணை, வண்டி, வீடு முதலிய ஒவ்வொரு வஸ்துவும் ஸ்தூல த்ருஷ்டியில் ஒரே வஸ்துவாகவும், உறுப்புக்களை உற்றுக்காணுமிடத்துப் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபவஸித்தம்.

நம்மையே யெடுத்துக் கொள்வோம் 'ராமாநுஜனென்பவன் ஒருவன்' என்று சொல்லுகிறோம். செவி வாய் கண் மூக்கு முதலான பல உறுப்புகளோடு கூடின ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன்- என்று சொன்னதாகத் தேறுமேயல்லது அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை என்று சொன்னதாகத் தேறமாட்டாதன்றோ. இன்னுமொன்று பாருங்கள். 'ராமாநுஜன்சிவப்பாயிருக்கிறான்' என்றும், 'ராமாநுஜன்மேதாவியாயிருக்கிறான்' என்றும் வழங்கி வருகிறோம். இவ்விரண்டு வார்த்தைகளிலும் 'ராமாநுஜன்' என்கிற சொல் உள்ளது. சிவப்பாயிருக்கிறானென்னும் போது ராமாநுஜனென்ற சொல்லானது சரீரத்தை நோக்கியது. மேதாவியாயிருக்கிறானென்னும் போது அந்தச் சொல் ஆத்மாவை நோக்கியது. ஏன்? சிவப்பு நிறம் சரீரத்திற்கு ஏற்குமேயல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் (அதாவது அறிவுடைமை) ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது சரீரத்திற்கு ஏலாது. ஆகவே ஒரே பதம் சிலஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சிலஸமயங்களில் உறுப்பைக்குறிப்பதாயும் தேறுகின்றதென்பது தெற்றென விளங்கிற்று.

இனி, நாம் முன்னே காட்டிய பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையுமெடுத்துக் கொள்வோம். சித்து அசித்து ஈச்வரனென மூன்று தத்துவங்களுள்ளனவாகச்சொல்லுகிற ச்ருதி வாக்கியங்கள் (பேதச்ருதிகளானவை), உண்மையாக அப்படிப்பட்ட மூன்று பொருள்களிருப்பதைச் சொல்லுகின்றன வாதலால் பொருந்தும். ஒன்றேயுள்ளது என்று சொல்லுகிற ச்ருதி வாக்யங்கள் (அபேத ச்ருதிகளானவை), சேதந அசேதநப்பொருள்களை சரீரமாகக் கொண்ட பரம் பொருள் ஒன்றே- என்கிற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதற்குத் துணைபுரியும் ச்ருதி வாக்யங்கள் "**யஸ்ய ப்ருதிவீ சரீரம்........ யஸ்ய ஆத்மா சரீரம்**" இத்தியாதியாகவுள்ளவைகளாம். இவை சரீர சரீரிபாவத்தை விளக்கவல்ல வாக்யங்களாகும். பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகிற வாக்யங்களாதலால் **கடக ச்ருதி** யென்று வழங்கப்பெறுமிவை. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களில் த்வைதிகளும் அத்வைதிகளும் கண் செலுத்தாமையினாலேயே அவர்கள் ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸப்படுத்த அவகாசமில்லை யாயிற்று. நம்முடைய ஸம்பிரதாயத்திற்கு இந்த யுகாதியில் ப்ரதமப்ரவர்த்தகரான நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் "**உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும்**"என்கிற அருமருந்தன்ன ஸ்ரீஸூக்தியினால் சரீராத்மபாவத்தை நிதியாகக் காட்டி யருளினபடியால் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான நம் ஆசார்ய சிகாமணிகள் அந்த திவ்ய ஸ்ரீஸூக்தியையே பின் பற்றி ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸமாக நிர்வகிக்க வல்லவர்களாயினர். அப்படிப்பட்ட ஆசார்யர்களில் தலைவரான ஸ்வாமி ராமாநுஜரைப்பற்றி "**அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்**" என்று கூறியது மிகப் பொருத்தமானதென்று உணரத்தக்கது.

ஆக, இந்த வியாஸத்தினால் விசிஷ்டாத்வைதக் கொள்கையை விளக்கமாக விவரித்தோமானோம். இவ்வர்த்தங்களையெல்லாம் ஸாரமாகவும் சுருக்கமாகவும் நெஞ்சிற் பதிய வைத்துக் கொள்ள ஸ்ரீ வேதாந்ததேசிகர் தாமே ஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளிச் செய்த ச்லோகரத்னமொன்றுண்டு; அதைக் கண்டபாடம் செய்வது நலமென்று கருதிக் கீழே குறிப்பிடுகிறோம்.

"மிதோ பேதம் தத்வேஷ்வபிலபதி பேதச்ருதிரதோ
விசிஷ்டைக்யாத் ஐக்யச்ருதிரபி ச ஸார்த்தா பகவதி,
இமாவர்த்தௌ கோப்தும் நிகிலஜகதந்தர் யமயிதா
நிரீசோ லக்ஷ்மீச: ச்ருதிபிரபராபி: ப்ரணீததே."

என்பதாமது.

நம்முடைய ஸித்தாந்தத்திற்கு சரீராத்மபாவமே உயிரானதென்றும், அதைத் திடமாகத் தெரிந்துகொள்ளப்பெறில் எந்த மதாந்தரஸ்தர்களையும் எளிதில் வென்றுவிடலாமென்றும் ஸ்ரீதேசிகர் தாமேஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஒரு ச்லோகரத்ந மருளியுள்ளார்; அதுவும் கண்ட பாடஞ் செய்து கொள்ளத் தக்கதென்று கீழே குறிப்பிடலாகிறது.

"யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாத் அவித்யாதம:
ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரமந்திமயுகே கச்சித் விபச்சித்தம:
தத்ரைகத்ர ஜடித்யுபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா
ஹேவாகப்ரதமாந ஹைதுககதாகல்லோல கோலாஹல:"

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் டெல்லி விஜயம்

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பாராட்டு

(அ. ராமானுஜாசாரி, B. A,
Minister of Industry and Supply)

ஸ்ரீ ஜகதாசார்ய ஸிம்மாஸநாதிபதி காஞ்சீபுரம் ப்ரதிவாதிபயங்கரம் மஹா வித்வான் ஸ்ரீ உ.வே. அண்ணங்கராசாரிய ஸ்வாமிகள், வடதிசை யாத்திரையின் ஒரு பகுதியாக, டெல்லி ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வேண்டுகோளுக்கிணங்கி, மிகவும் தயவு கூர்ந்து, பாரத தேசத்தின் தலைநகரான டெல்லிக்கும் விஜயம் செய்தார். ஸ்வாமிகள் பல ஜோலிகளுக்கு நடுவே பக்தகோடிகள் உஜ்ஜீவிக்கும்பொருட்டுச் சில விசேஷ உபந்யாஸங்கள் செய்தருளினார்.

http://acharya.org

25-11-48 லிருந்து 29-11-48 வரையில் ஒவ்வொரு நாளும் சாயங்காலம் "தென்னிந்தியா க்ளப்"பில் கீழ்க்கண்டவாறு உபந்யாஸங்கள் வெகு விமரிசையாக நடந்தேறின.

25—11—48 }
26—11—48 } ஸ்ரீராமாயண ஸாரம்

27—11—48 ஆண்டாள் ஸ்ரீ ஸூக்தி வைபவம்

28—11—48 கீதாஸாரம்

29—11—48 ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்

உபந்யாஸங்களைக் கேட்கக் கொடுத்துவைத்த ஒவ்வொரு பக்தரும் (ஸ்ரீ வைஷ்ணவர்கள் மாத்திரமல்ல, மற்ற ஸ்ரீ சங்கர, ஸ்ரீ மத்வ மதஸ்தர்களும்கூட) தாங்கள் ஒருபடி உயர்ந்துவிட்டதாகவே நினைத்தார்களென்றால் அதில் ஆச்சரியமில்லை! ஸ்வாமி ஒவ்வொரு உபந்நியாஸத்திலும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் மிகவும் பரந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டதென்பதை வற்புறுத்தினார். ஸ்ரீ ராமாநுஜர் தங்களுடைய ஸ்ரீ பாஷ்யங்களைச் சிறிதளவேனும் எங்கும் குறைத்துப் பேசவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

உபந்யாஸங்களுக்கு மிகவும் பக்தி ச்ரத்தையாக ,வந்த பெரியோர்களில் முக்கியமாக, மாஜி பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் ஸர். வரதாசாரியார், ஸ்ரீ S. V. கிருஷ்ணஸாமி, I. C. S. (Joint Secretary, Govt of India), மாஜி அகௌன்டெண்ட் ஜனரலாக ஸ்ரீ V. S. சுந்தரம் (இவர் ஸபையின் பிரஸிடெண்டும்கூட), ஸ்ரீ C. V. ராஜன், ஸ்ரீ C. S. பார்த்தசாரதி அய்யங்கார் முதலியோரைக் குறிப்பிடவேண்டும். அநேக ஸ்திரீ பக்த சிரோன்மணிகளும் கூட்டத்தை அலங்கரித்தனர். "இவ்வளவு அற்புதமான உபந்யாஸங்களை இதுவரை இச்சபையில் கேட்டிருக்கிறோமோ!" என்ற கேள்வி அநேகருடைய உதட்டில் த்வனித்தது.

ஐந்து நாட்கள் விசேஷ உபந்யாஸத்தின் முடிவில், ஸ்ரீ வைஷ்ணவ சபையின் சார்பாக, மாஜி பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் ஸர். எஸ். வரதாச்சாரியார், ஸ்ரீ ஸ்வாமிக்கு, ஸ்ரீ ராமபிரான் படத்தை அலங்கரித்த மாலையை இட்டு, சபையின் கிருதஜ்ஞதையைத் தெரிவித்தார்—

"நம்மில், முன்பு ஸ்வாமியின் உபந்யாஸங்களைக் கேட்க பாக்கியம் பெருதவர்களும், இந்த ஐந்து உபந்யாஸங்களைச் செவியுற்றபிறகு, இவருடைய அற்புதமான ஞானத்தைப் பற்றித் தெளிவுற அறிந்திருக்கலாம். நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஸ்வாமி அண்ணங்கராச்சாரியார் நேற்று "கீதா ரஹஸ்ய" ப்ரஸங்கத்தில் **"யதா யதா ஹி"** என்ற ச்லோகத்தின் உட்பொருளை விளக்கும்போது '**ஆத்மாநம்**' என்பதற்கு ஞானிகள் என்ற அர்த்த விசேஷத்தையும், அத்தகைய ஞானிகளை எம்பெருமான் பதே பதே அவதரிப்பித்தருளுகிறான் என்பதையும் விளக்கினார். அப்பேர்ப்பட்ட வ்யக்திகளில் ஸ்வாமியும் ஒருவர் என்பதே என் துணிபு. (சபையோரின் ஆமோதிக்கும் கரகோஷம்) அந்த ச்லோகத்தில் '**க்லாநி**' என்னும் பதத்தின் ஸ்வாரஸ்யத்தை ஸ்வாமி எடுத்துக்காட்டினபடி, தற்காலத்தில் தர்மத்திற்கு வேண்டிய ஹானி ஏற்பட்டிருக்கிறது என்பது நிர்விவாதம் (சிரிப்பு) ஸ்வாமி,

http://acharya.org

இன்றைய உபந்யாஸத்தில் நம்மாழ்வாரையே கோவில்களிலுள்ள ஸ்ரீ சடகோபம் குறிப்பிடுகிறதென்றும், அந்த ஸ்ரீ சடகோபம் நல்லார், கெட்டார் என்ற வித்தியாஸமின்றிக்கே எல்லோர் தலையிலும் வைக்கப்படுகிறது என்றும் அருளினர். ஸ்வாமியும் அதேமாதிரி, ஸ்ரீ சடகோபர் போலவே, தம்முடைய அரிய பெரிய ஞானத்தை வித்யாஸமின்றியே யாவர்க்கும் பலனளிக்கும்படி உபந்யாஸங்களைச் செய்துகொண்டு வருகிறார்.

"ஸ்வாமிகள் எனக்குத் தெரிந்தே 30 ஸம்வத்ஸரங்களுக்குமேலாகவே, ஆயிரக்கணக்கான ஸஞ்சிகைகளையும், வியாஸங்களையும், வியாக்யானங்களையும் வெளியிட்டுக்கொண்டு வருகிறார். அவைகள் ஸம்ஸ்க்ருதம், தமிழில் மாத்திரமல்ல, தெலுங்கிலும், ஹிந்தியிலும் கூட. ஸ்வாமியின் ஒரே நோக்கம் நம்முடைய உயர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்யவேண்டுமென்பதே. இதற்காக அவர் புரிந்துள்ள தொண்டு கொஞ்சநஞ்சமல்ல. எம்பெருமான் இப்புனித கார்யத்தை நடத்தும் பாக்கியத்தையும், அதற்கு வேண்டிய அற்புத ஞானத்தையும் நம் ஸ்வாமிக்குக் கடாக்ஷித்திருக்கின்றார். நம்மைப்போன்றவர்கள் அவர் அறிவைப் பூரணமாய் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஸ்வாமி டெல்லிக்கு மறுபடியும் எள்ளி இதேபோன்ற உபந்யாஸங்களைச் செய்யவேண்டுமென்பதே எல்லோருடைய ப்ரார்த்தனை. எம்பெருமான் ஸ்வாமிக்கு அவர் உயரிய புனிதமான கைங்கர்யத்தைத் தொடர்ந்து வெகுநாட்கள் நடத்த தீர்க்காயுஸ்ஸையும், போதுமான தேக பலத்தையும் அருளவேண்டும்". சபையோர் எதா சக்தி செய்யும் சம்பாவனையை அங்கீகரிக்குமாறு ப்ரார்த்தித்து, ஸ்ரீ வரதாச்சாரியார் மேலும் கூறினார்:—"ஸ்வாமியின் உயர்ந்த உபந்யாஸங்களால் நாங்கள் தன்யர்களானோம். என்ன ப்ரதி செய்தாலும் போதாது. ஆனால் ஒரு குரு தன்னுடைய சிஷ்யனிடமிருந்து ஒன்றையும் எதிர்பார்க்காவிட்டாலும், சிஷ்யன் தானாகவே, தன்னாலியன்ற காணிக்கையை சமர்ப்பிப்பதுபோல, இந்த சபையாரும் இச்சிறிய காணிக்கையை ஸமர்ப்பிக்க முன்வருகின்றனர். ஸ்வாமி அதை பெரிய மனது செய்து ஏற்றுக்கொள்ளவேண்டும்" (கரகோஷம்)

பிரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டபின்னர், கூட்டம் இனிது கலைந்தது.

ஸ்வாமியும், உபந்யாஸம் முடிந்ததும், அவருடைய திவ்ய தேச யாத்திரையை மீண்டும் தொடர்ந்து நடத்த நேராகக் கான்பூருக்கெழுந்தருளினர்.

மறுபடியும் டெல்லி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்வாமியை தண்டன் ஸமர்ப்பிக்கத் தருணம் எப்போது வாய்க்கும்? என்றே ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருப்பது.

http://acharya.org

# அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

நம்முடைய ஸம்பிரதாயத்திலுள்ள அர்த்த விசேஷங்களை ஆங்கில பாஷையில் கண்டுகளிக்க விருப்பமுடையார் பலர் காணப்படுகிறார்கள். தமிழ் மக்களாகப் பிறந்தும் ஆங்கிலப் பழக்கத்தை அதிகமாகக் கொண்டது காரணமாக அவர்கள் ஆங்கில பாஷையிலுள்ள வியாஸங்களை ஆவலோடு படிக்க விரும்புவது யுக்தமே. அப்படிப்பட்டவர்களுக்கும் த்ருப்தியளிக்கவேண்டி இப்பத்திரிகையில் ஆங்கிலப் பகுதியொன்று சேர்க்கத் துணிந்தோம். நாம் தமிழ்ப் பாஷையிலெழுதும் வியாஸங்களையே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவ மிகுந்த ஆவலோடும் அன்போடும் முன்வந்தவர் ஸ்ரீமான் உ. வே. S. (சேட்லூர்) **ரங்கஸ்வாமி அய்யங்கார்.** M. A. என்னும் நமது உயிர் நண்பர். இவர் தற்காலம் உத்யோக நிமித்தமாகப் **பூனா**வில் வாழ்பவர். இவர் மொழிபெயர்த்து உதவும் வியாஸங்களும் இப்பத்திரிகையில் சமயங்களில் வெளிவந்துகொண்டிருக்கும்.

இங்ஙனம்
**பத்திராதிபர்.**

http://acharya.org

# SRI RAMANUJA & SRI KRISHNA

## A COMPARISON

(Translated from the Tamil essay published in the Tamil journal "Sri Ramanuja" by Sri Kanchi P. B. Annangarachariarswami)

(By S. Rangaswami, M. A.)

Our journal is named after Sri Ramanuja, and it is our intention to publish in every number a leading article on the great saint. The first essay in every issue will concern itself with the great qualities of his mind and heart, the important incidents in his life, or the precious teachings enshrined in the works of this beloved world-teacher. Here, we commence with an analysis of the meanings suggested by his holy name "Sri Ramanuja", in order to dwell upon their appropriateness and significance, as enjoined in "Ramanuja-Nutranthadi". (i. e. "hundred verses in praise of Sri Ramanuja, composed by Amudhanar")

2. If we probe into the reasons why this saint was named "Sri Ramanuja", this is what we gather from the books of the ancients:—The word, "Sri Ramanuja"—means "the younger brother of Sri Rama". This was the name by which "Lakhmana", the younger brother of Sri Rama, among Dasaratha's sons was known. The life of Lakshmana was spent in incessant service; so was Ramanuja's in service to his fellowmen wherein he found the truest wealth. It looks as though Sri Ramanuja's future father-in-law, 'Thirumalai Nambi' had understood, in a prophetic manner, the significance of the name when he named the saint in his childhood as "Sri Ramanuja?

3. When Sri Rama, in deference to the wishes of Kaikeyi, went to the forest, his younger brother Lakshmana, sought Sri Rama's permission to accompany him wherever he went. Lakshmana's object was to render faithful and unblemished service to Sri Rama and Sita. The life of Sri Ramanuja abounds with many delightful episodes of service to humanity. The splendid organisation that Sri Ramanuja set up in Srirangam temple bringing into play all the wealth of the fine arts in service to Lord Ranganatha, and the prominence he gave to the sacred utterings of Saint Nammalvar, ranking them with Vedic lore are alone monumental

http://acharya.org

deeds of priceless renown. Most aptly was therefore the saint named 'Sri Ramanuja', and his other names "Lakshmana-muni" or Saint Lakshman and "Elai-Alwar" or "younger Alwar" most emphatically confirm the justness of the epithets.

4. Now, the word "Sri Ramanuja" may as fittingly be applied to Sri Krishna as to Lakshmana. For the reason that Sri Krishna was BalaRama's younger brother, it will not be incorrect to style him as Sri Ramanuja. In fact, in the classical verses of "Mukuntha Mala". the famous prayer to Sri Krishna begins with the address "Hey! Ramanuja"!. Hence, it may be rightly assumed that tradition, which finds its echo in the poet's verses also lends its support to the view that Sri Ramanuja was named after Sri Krishna. Sri Nigamantha Desika, the well-known Acharya who composed "Yathiraja—Sapthathi" refers in unmistakeable terms to Sri Ramanuja as a counterpart of Sri Krishna.

5. There are many points of similarity in the lives of Lord Krishna and Sri Ramanuja The deeds of the Lord who incarnated Himself as Sri Krishna and those of Sri Ramanuja are compared side by side in this article. The beautiful verse in "Yathi-raja Sapthathi" referred to above abounds in puns, while establishing the comparison between the two great teachers. Only scholarly minds immersed in the sea of sanskrit lore can understand and appreciate the figures of speech contained therein. But the basis of our comparison relates itself mainly to the events in their lives, and the allegorical significance of the incidents is attempted to be established by such a comparison.

(1) It is universally known that Lord Krishna was born in a prison. Sri Ramanuja's birth-place was also a prison. In the fine words of Nammalwar, earthly existence itself may be likened to a prison-house. So utterly dark is this world that, at different times, when steeped in gloom, great teachers are born "to redeem the godly ones in answer to their loving prayers", as stated in the sacred hymns of Thirumangai Alwar and Nammalwar.

(2) At the time of Sri Krishna's Incarnation in this world, there was a halo of glory around him, and he revealed himself before his mother Devaki, with his divine weapons, the conch and the Disc. Likewise, Sri Ramanuja was trailing clouds of glory when he was born, and he did not weep and cry like any ordinary child. Sri Krishna's birth place was one: the place of his boyhood, another; and the abode of his manhood, quite a different place. He was born in Muttra; his boyhood was spent in Gokulam; and in manhood he lived in Dwaraka. Sri Ramanuja was born in Sriperumbudur; his youth was spent in Kanchipuram; and he, later on, spent his days at Srirangam, Melcote and other places. In a finer and subtler way.

http://acharya.org

Sri Ramanuja may be said to have been born in **Thirumanthram** and nurtured in **Dwayam**, He gained soul-knowledge or re-birth through **Ashtaksharam**, and by his constant meditation of Dwayam he moulded his spiritual life in accordance with its esoteric teachings, making it rich with his divine experience. In having "Thirumanthram" as the birth-place, and "Dwayam" as the place of his youth and manhood, Sri Ramanuja compares with Lord Krishna.

(3) Lord Krishna was not the sole son of his parents. who had lost six children at the cruel hands of Kamsa, the moment they were born. The birth and death of these children have left no impress on the world which has neither gained nor lost anything through them. The advent and departure of many men in the world's arena is of a like nature;—the world hears only of their birth and death. Sri Ramanuja like Lord Krishna illumined the womb of his mother and brought glory to the world in which he was born.

(4) When Sri Krishna was carried from Muttra to Gokulam by his father Vasudeva even the mighty waters of the Yamuna which was in high floods abated in its force, and became knee-deep, allowing him to cross her easily. From the time of Sri Ramanuja's sojurn in this world, "the ocean of birth has become dry, enabling mankind to reach the great heaven of peace",—to adopt the words of Peri-Alwar.

(5) The Supreme Being concealing all his greatness, like fire covered with ashes, identified himself with the cowherds, and became one of them, even though they were so ignorant that they could not distinguish the right hand from the left. Even so, Sri Ramanuja, laying aside his great powers of knowledge mingled with the ignorant folk of this world. Sri Krishna not only spent his days among the cowherds, but also in the company of demons who sought to destroy him. Sri Ramanuja had likewise to keep company with Yadavaprakasa, who harboured nothing but evil designs on his life.

(6) When Sri Krishna was in Gokulam, Butana who was set on by the wicked-minded Kamsa, assumed the guise of a beautiful mother and with her poisonous breasts began to feed the baby Krishna who drank her milk and her life too at the same time. Sri Desika who alludes to this incident in his work 'Yadavabhyudha' compares Butana to "Maya" or Illusion. Prakriti or Nature is otherwise named as Maya. The Maya theory with its seductive allurements attracts us by the semblence of truth in regarding the world as an illusion. But Sri Ramanuja by his inherent greatness was not easily beguiled by it.

http://acharya.org

7. Sri Krishna with his legs upraised. hurled down a "deceptive cart, breaking it to pieces"—(Thiruppavai Verse 6). The mere touch of Sri Ramanuja's holy feet has wrought a similar miracle in men's lives; Vehicles carry us from place to place, and our deeds on earth take us through many worlds called hell (Naraga) and heaven (swarga) which are as transient and deceptive as the cart which came to destroy Sri Krishna. Meditation upon Sri Ramanuja's holy feet destroys for ever this endless journey, since he takes his devotees through the good and straight path of Archirathi, closing other devious and evil routes for ever.

8. Baby Sri Krishna who was bound with a string to a mortar by his mother Yasoda crawled forth dragging the mortar behind him to the place where two Arjuna trees stood side by side, and by a slight impact uprooted them, thereby releasing two yakshas from their curse which confined them to the trees. Like the twin Arjuna trees which knitted themselves together, there are several twin forces, which conjointly bear us down. In the fourth, seventh and fifteenth chapter of the Bhagavat-Gita. these twin forces are described as "Dwandwam"—or pairs of well-kint, evils such as pleasure and pain, Ahamkara and Mamakara, Kama and Krodha Sin and merit etc., A pure and deep devotion to Sri Ramanuja's holy feet liberates us from the twin forces of good and evil.

9. Yasoda, Sri Krishna's mother, beheld all the seven worlds in her baby's mouth, and was struck with ecstatic wonder. Sri Ramanuja may be said to have unfolded through his works. the seven-fold path of wisdom contained in the (1) Sruthis (2) Smrithis (3) Ithihasas or epics (4) Puranas (5) Pancharathra (6) the divine works of the Alwars and (7) the beautiful utterances of the Acharyas.

10. There was a deep pool in the Yamuna known as Kaliya's madu (pool), the water of which boiled with the fire of poison from a fierce serpant known as Kaliya, and it was Lord Krishna who subdued it. While mentioning this incident in "Yadavabhyudha", Sri Vedanta Desika compares Lord Krishna's great exploit to Sri Ramanuja's merciful deed. The serpent Kaliya with his five hoods splashed the waters of Yamuna, turning it muddy and poisonous. The distortion by wrong interpretation of the clear text of the Vedas by men of other creeds may be likened to Kaliya's misdeeds. Just as Sri Krishna restored the waters of the Yamuna to their pristine purity and sweetness dislodging Kaliya from there, so also Sri Ramanuja by his correct interpretation of the Vedas saved many thousands of good and pious souls from blundering ways. The Vedas occupy the place of Yamuna; perverted disputants who wrongly interpret the Vedas, that of Kaliya, the serpent; and Sri Ramanuja, that of Sri Krishna just as the pure, puissant waters of the Yamuna ghat were ever frquented by Sri Krishna, the Vedas too have never lost their holy connection with the Lord.

(CONTINUED)

http://acharya.org

அதில் சிறிது பாகம் இடம் பெயர்ந்து வெளிநோக்கிவிட்டபடியால் அதை மாத்திரம் விட்டுவிடவேண்டியதாயிருக்கிறது. அது மிகவும் தேஜோமயமானதாகையால் ஒருவராலும் தாங்க முடியாததாயிற்றே; அதைத் தாங்கவல்லவன் யாவன்? அதை எனக்குச் சொல்லவேண்டும்'' என்ன, தேவர்கள் 'அதை இப்பூமி தரிக்க வல்லது' என்று விடைகூற, பின்பு உருத்திரனும் அந்த வீரியத்தைப் பூமியில் விட்டனன். அது மலைகளுங்காடுகளுமாகிய பூமியெங்கும் நிரம்பிவிட்டது. அப்போது தேவர்கள் அத்தேஜஸ்ஸு பூமியெங்கும் பரந்து வருவதைக்கண்டு அஞ்சி அக்னிதேவனை நோக்கி 'நீ வாயுவுடன் கூடி இந்தச் சிவ வீரியத்திற்குள் புகவேண்டும்' என்றுரைக்க, அக்னியும் அந்த வீரியத்தில் நுழைந்து வியாபித்திருக்கையில் அது வெள்ளிமலையாயிற்று. பின்பு காலவசத்தினால் அது நாணற்காடாக விளங்கிற்று. அதில்தான் ஆறுமுகன் பிறக்கப்போகின்றனன். பின்பு பார்வதி அவ்வானவர்களனைவரையும் நோக்கி, "புதல்வனைப்பெற விரும்பி முயன்ற எனது விருப்பத்தைத் தடுத்தீர்களாகையால் உங்களுக்கும் உங்கள் மனைவியர்களிடத்தில் ஸந்தானம் உண்டாகாமற் போகக்கடவது. இன்றுமுதல் உங்கள் மனைவிகள் மலடிகளாகக்கடவர்'' என்று சாபம் கொடுத்தனள். இங்ஙனம் தேவர்களுக்குச் சாபம் கொடுத்ததுமல்லாமல் பூமியையும் நோக்கி 'நீ எனக்குப் பிள்ளையுண்டாவதை விரும்பாததனாலும் கோபத்தை விளைத்ததனாலும் அனேக ரூபமுடையளாயும் பலர்க்கு மனைவியாயும் ஆகக்கடவை; பிள்ளையுண்டாவதனால் விளையும் மகிழ்ச்சியை நீயும் அடையாதிருக்கக் கடவை' என்று சபித்தனள்.

பிறகு சிவபெருமான் பார்வதியோடு மேற்றிசையை நோக்கிச் சென்று இமயமலையின் வடபக்கத்திலுள்ள ஓர் சிகரத்தில் அப்பார்வதியுடன் கூடித் தவஞ் செய்துகொண்டிருந்தனன். அப்போது, தேவர்களனைவரும் பிரமனிடம் வந்து தங்களுக்கு மிகவல்லவனான ஒரு சேனாதிபதியை அமைத்துத் தருமாறு வேண்ட, பிரமன் 'பார்வதிதேவி, தேவர்களுக்குத் தங்கள் மனைவிகளிடத்தில் ஸந்தான முண்டாகாதென்று சாபங் கொடுத்தமையால், நீங்கள் உங்களுடைய மனைவிகளிடத்தில் மக்களைப் பெறமுடியாது. அத்தேவியினது சாபம் நீக்க முடியாதது. ஆனால் இவ்வாகாச கங்கையினிடத்தில் அக்னிதேவன் ஒரு புதல்வனை உண்டாக்குவான். அவன் தேவர்களனைவருக்கும் சேனாபதியாகி நிற்பான்' என்றனன். அதுகேட்டுத் தேவர்களனைவரும் கைலாஸ பர்வதத்திற்குச்சென்று, அங்குச் சிவனது வீரியத்தினுட் புகுந்து வேறொரு சரீரங் கொண்டிருக்கிற அவ்வக்னிதேவனைப் பார்த்து 'ஓ அக்னியே! தேவர்களின் காரியத்தை நீ நிறைவேற்றவேண்டும். நீ மஹா தேஜஸ்வியாகையால் பர்வத புத்ரியான கங்காதேவியினிடத்தில் உன்னிட மிருக்கும் உருத்திர வீரியத்தை விட்டு மகா வீரனான ஒரு தேவ சேனாதிபதியை எமக்கு உண்டாக்கித் தருவாய்' என்றனர்.

அவனும், "அப்படியேயாகட்டு" மென்று சொல்லிக் கங்காதேவியிடம் வந்து 'தேவீ! நீர் சிவனது வீரியத்தைப் பெற்றுக் கருவடையவேண்டும். இது தேவர்களுக்கு மிகவும் விருப்பமாக விருக்கின்றது' என்று கூற, அப்படியே கங்கையும் ஓர் அழகான பெண்ணின் வேடங்கொண்டு எதிரே வந்து நின்றனள். அக்னி தேவனும் அவளுடைய பேரழகைக் கண்டு மிகவும் அவா மிகுந்தவனாய்த் தன் அவயவங்களனைத்திலும் இருந்த சிவ வீரியத்தை அத்தேவியினது அங்கங்களிலெங்கும் பரவும்படி சொரிந்தனன். அது கங்காதேவியினது அவயவங்களிலெங்கும் நிறைந்து நின்று எரிக்கவே, அவள் அதைப் பொறுக்கமாட்டாமல் மிகவும் மனம் தத்தளித்து அவ்வக்னிதேவனை நோக்கி 'நீ என்னிடத்தில் சொரிந்த சிவபிரானுடைய வீரியமானது எனது அவயவங்களெங்கும் பரந்து

http://acharya.org

என்னை யெரிக்கின்றது. நான் அதைத் தரிக்கவல்லவளல்லேன்' என்ன; அவ்வக்னிதேவன் கங்காதேவியைப் பார்த்து 'இதோ இந்த இமய மலையின் அருகிலிருக்கின்ற இச்சிறிய மலையில் இந்தக் கர்ப்பத்தை விட்டிடு' என்றனன். கங்காதேவியும் அந்தக் கர்ப்பத்தைத் தனது ஸர்வாவயவங்களினின்றும் வாங்கி அப்படியே அம்மலையில் விட்டுவிட்டனள். இங்ஙனம் உருக்கிக்கொட்டின உயர்ந்த பொற்குழம்புபோன்ற அச் சுக்ல சோணிதங்களே தங்கமாகவும் வெள்ளியாகவுந் தோன்றி விளங்கின்றன. அதிலுள்ள க்ஷார பாகமானது தாம்பிரமும் இரும்பும் ஆயிற்று. அதன் அழுக்குபாகமானது தகரமும் ஈயமும் ஆயிற்று. இவ்வாறு கங்கையினிடமிருந்து வெளியான சிவபிரானது வீரியம் பூமியில் வீழ்ந்து பலவித உலோகங்களாகத் தோன்றி வளர்ந்தது. கங்காதேவி அந்தக் கர்ப்பத்தை அங்ஙனம் விட்டவுடனே அவ்வெள்ளிமலையில் முளைத்திருந்த நாணற் காடனைத்தும் அவ்வீரியத்தினுடைய சோதி வெள்ளத்திலாழ்ந்து ஸ்வர்ணமாய்விட்டது. கங்கை வீரியத்தை விட்டபின்பு குமரன் பிறந்தனன். உடனே இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் கிருத்திகா தேவிகளைப் பார்த்து 'நீங்கள் பாலைக் கொடுத்து இக்குழந்தையை வளர்ப்பீர்களாக' என்று கட்டளையிட்டனர். அத்தேவிகளும் தேவர்களுக்கெதிரில் 'இக்குழந்தை நம்மனைவர்க்கும் புத்திரனாகட்டும்' என்று கொண்டு அச்சிறுவனுக்குப் பால் கொடுக்கத் தொடங்கினர். அக்குழந்தை ஒரு பகல் மாத்திரம் முலைப்பால் குடித்துப் பின்பு க்ரமமாக வளர்ந்துவந்து சிவனது வீரியத்தில் பிறந்தவனானதுபற்றி மிக்க பராக்ரமத்தினால் அசுரப் படைகளைக் கூட்டங் கூட்டமாக வென்றுவிட்டனன். பிறகு தேவர்களெல்லோரும் ஒன்றுகூடி அவ்வாறுமுகக் குமரனைத் தமது படைகளுக்கெல்லாம் அதிபதியாயிருக்கும்படி அபிஷேகஞ் செய்தனர்.

[தேவகங்கை மானிடவுலகத்தில் வந்து சேர்ந்த வரலாற்றை இராமனுக்குத் தெரிவிக்க விரும்பிய முனிவர் ஸகர சக்ரவர்த்தியின் வரலாற்றைக் கூறப்புகுந்து, அவ்வரசன் அசுவமேதயாகஞ் செய்தமை கூறுதல்.]

இராகவனே! முன்பு அயோத்யா நகரில் ஸகரனென்னும் அரசனிருந்தனன். அவனுக்குக் கேசினியென்றும் ஸுமதியென்றுமிரண்டு மனைவிகளிருந்தனர். அவ்வரசன் அம்மடந்தையரிருவரோடும் மகப்பேறு பெறுதற்காக இமாலயத்தின் அருகிலிருக்கிற ப்ருகு ப்ரஸ்ரவண மென்கிற மலையையடைந்து அங்குத் தவஞ் செய்துகொண்டிருந்தனன். இங்ஙனம் நூறு வருஷங்கள் சென்றன. அங்கிருந்த ப்ருகு மஹரிஷி அத்தவத்தினால் மனங்கனிந்து அம்மன்னவனது எதிரில் தோன்றி 'உனக்கு வேண்டியவரையில் அளவின்றி மக்கள் உண்டாவர்கள்; அவர்களால் உனது புகழ் உலகமெங்கும் பரவப் போகின்றது. உன் மனைவிகளில் ஒருத்தி வம்சவிருத்தியைச் செய்யவல்ல ஓர் புதல்வனைப் பெறுவள்' என்று வரமளித்தனர். பின்பு அவ்வரசன் மனைவிகளோடுகூட அம்மாமுனியை வணங்கித் தனது நகரத்தை யடைந்திட, சில நாளைக்குப் பிறகு முதற் பத்தினியாகிய கேசினி ஸகரனிடத்தினின்று அஸமஞ்சனென்னும் ஓர் பிள்ளையைப் பெற்றனள். இரண்டாம் பத்தினியாகிய ஸுமதி சுரைக்காயைப் போல் ஓர் கர்ப்பப் பிண்டத்தைப் பெற்றனள். பின்பு அப்பிண்டம் வெடித்து உடைய, அதினின்று அறுபதினாயிரம் பிள்ளைகள் வெளியாயினர். அரசனாணைப்படி செவிலித் தாய்கள் அப்பிள்ளைகளை நெய்க்குடத்திலிட்டு வளர்த்து வந்தனர். அவ்வாறே பல ஆண்டுகள் சென்றபின்பு அவ்வறுபதினாயிரம் பிள்ளைகளும் யௌவனம் பெற்று அழகு பொருந்தி நன்கு விளங்கினர். மூத்த மனைவியின் குமாரனாகிய அஸமஞ்ச

http://acharya.org

னென்பவன் தினந்தோறும் ஊரிலுள்ள பிள்ளைகளையெல்லாங் கூட்டிச் சென்று ஸரயூ நதியின் வெள்ளத்தில் வீழ்த்தி அப்பிள்ளைகள் நீரில் மூழ்கிப் பரிதபிப்பது கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தனன். அக்கொடிய புதல்வனை அவ்வரசன் தன் பட்டணத்திலிருக்கவொட்டாமல் துரத்தி விட்டனன். அவ்வஸமஞ்சனது குமாரனை அம்சுமானென்பவன் உலக மனைத்தும் விரும்பும்படி நற்செயல் செய்துவந்தனன். இது இவ்வாருக, அந்த ஸகர மஹாராஜன் யாகஞ்செய்ய விருப்பங் கொண்டு அதை ஆரம்பித்தனன்.

[ஸகரமன்னவன் யாகஞ் செய்தலும், யாகக்குதிரை பூமிவலம் வருகையில் காணமற் போதலும், அதைத் தேடப் புறப்பட்ட அறுபதினாயிரம் ஸகர புத்திரர்கள் பூமியைக் கோத்துதலும், அது பற்றித் தேவர்கள் பிரமனிடம் முறையிடுதலும் கூறுவது.]

ராமா, ஸகர சக்ரவர்த்தியின் வரலாற்றை விரிவாகச் சொல்லுகிறேன். கேள்; இமய மலைக்கும் விந்திய மலைக்குமிடையான புண்ய பூமியில் அந்த சக்ரவர்த்தி யாகம் நடத்தினர். அந்த யாகத்தில் பூப்பிரதக்ஷிணஞ் செய்யத் தொடங்கிய குதிரையைக் காத்துக்கொண்டு அம்சுமானென்பவன் கையும் வில்லுமாய்ப் பின்செல்ல, இந்திரன் ராக்ஷஸர்களுக்கு உரிய மாயையைக் கைக்கொண்டு வேருெரு சரீரம் பூண்டு அந்த யாகக் குதிரையைப் பிறரறியா வண்ணம் கொண்டுபோய் விட்டனன். அப்பொழுது புரோஹிதர்கள் அனைவரும் யஜமானனாகிய ஸகரமஹாராஜனைப் பார்த்து 'உனது யாகத்தைக் கெடுக்கும்பொருட்டு யாகக் குதிரையை எவனே அபஹரித்துக்கொண்டுபோய்விட்டனன் என்று தெரிகிறது. அவனைக் கொன்று குதிரையைத் திருப்பிக் கொண்டுவரச் செய்தாலன்றி யாகம் நிறைவேருது; இனி அக்காரியத்தையே நோக்கவேண்டும்' என்றனர். அவ்வரசனும் அதுகேட்டு அந்த ஸபையில் தனது புதல்வர்கள் அறுபதினாயிரம் பேரையும் பார்த்து "புத்திரர்களே! கடல் சூழ்ந்த இப்பூமியெல்லாந் திரிந்து நமது யாகக் குதிரையைத் தேடிப் பாருங்கள். பூமியோ மிகவும் பரந்து கிடக்கின்றது, ஆகையால் நீங்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு யோசனை தூரம் வீதம் இப்பூமியெங்குந் தேடுங்கள்: குதிரை எங்கும் அகப்படாவிடில் பின் திரும்பாமலேசென்று அக்குதிரை அகப்படும் வரையில் பூமியைக் கொத்திப் பாருங்கள். நான் யாக தீக்ஷையில் முயன்றிருக்கிறேனுகையால் மீளவும் குதிரையைப் பார்க்கும் வரையில் இவ்விடத்திலேயே இருக்கக் கடவேன்' என்றனன். உடனே அப்புத்ல்வர்களனைவரும் தகப்பனது கட்டளைப்படி பூமியெங்குந் தேடிக் கிடைக்காமையினுல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனை தூரம் அகல நீளமுள்ள பூமியாகப் பங்கிட்டுக்கொண்டு, வஜ்ராயுதத்தை நிகர்த்திருக்கின்ற தமது நகங்களால் பூமியெங்கும் கொத்தியெறியவே, பாதாள வாஸிகளான ஸர்ப்பங்களும் அசுரர்களும் ராக்ஷஸர்களும் மற்றுமுள்ள ஜந்துக்களும் துன்புறுத் தப்பட்டுக் கூச்சலிட அதனுல் பொறுக்கமுடியாத ஒரு பேரோசை உண்டாயிற்று. இங்ஙனமே அவ்வீரர்கள் அறுபதினாயிரம் யோசனை தூரமுள்ள பூமியையும் பாதாளம் வெளித் தோன்றும்படி தோண்டவே தேவர்கள் முதலிய அனைவரும் மனந் தத்தளித்துப் பிரமனிடஞ் சென்று வணங்கி நின்று "மஹானுபாவரே! ஸகர சக்ரவர்த்தியின் புதல்வர்கள் பூமியனைத்துந் தோண்டிப் பாழாக்குகின்றனர், பாதாள வாஸிகள் துன்பத்திற்குள்ளாக்கப் படுவதோடு 'இவனே எமது யாகத்தைக் கெடுத்தவன்; இவனே எமது குதிரையைக் கொண்டு போனவன்' என்று சொல்லி அந்தோ! பாதாளத்திலிருந்துவெளிப்படும் எல்லோரையுங் கொன்று விடுகின்றனர்" என்று மொழிந்தனர்.

http://acharya.org

[ஸகர புத்திரர் அறுபதினாயிரவரும் கபிலமுனியிடத்து அபசாரப்பட்டு நீறாகியதைக் கூறுதல்]

ராமா! பிறகு பிரமதேவன் தேவர்களைநோக்கி 'இத்தரணி முழுவதும் ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு அதீனமாயிருக்கின்றது, அம்மஹானுபாவன் கபிலாவதாரஞ்செய்து இப்பூமிசக்கரத்தைத் தரித்துக்கொண்டிருக்கின்றனன். ஆகையால் ஸகர மஹாராஜனுடைய குமாரர்கள் பூமியைக் கொத்திக்கொண்டு உள்ளே புகுவார்களாயின் அக் கபில மஹாதேவனுடைய கோபாக்கினியால் கொளுத்தப்பட்டு நீறாகப் போகின்றனர். இவர்கள் வெகு காலம் பிழைத்திராமல் சீக்கிரத்திலே மாளப்போகின்றனரென்பது முன்னமே நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது' என்று மொழிந்திட, தேவர்கள் மனந்தேறிச் சென்றனர். அந்த ஸகர புத்திரர்கள் பூமியைப் பிளந்து முழுதுஞ் சுற்றித்திரிந்து தேடியுங் குதிரையைக் காணாமல் மீண்டு தகப்பனிடஞ்சென்று 'நாங்கள் பூமியெல்லாம் சுற்றித்திரிந்தும் பிளந்து தேடியும் அக்குதிரையாயினும் அதைத் திருடிக்கொண்டுபோனவனாயினும் எங்களுக்குப் புலப்படவில்லை. இன்னமும் என்ன செய்யவேண்டும்? அதற்குத் தக்க உபாயத்தை ஆலோசித்துச் சொல்லவேண்டும்' என்றனர். அதற்கு ஸகரசக்ரவர்த்தி மிகவுங் கோபித்துக்கொண்டு 'மீளவும் போய்ப் பூமியைப் பிளந்து வெட்டுங்கள்; குதிரையைக் கொண்டுபோனவனைக் கண்டுபிடித்துக் காரியம்முடித்துக்கொண்டே நீங்கள் திரும்பி வரவேண்டும்' என்று கட்டளையிட்டனன். உடனே அவர்கள் பாதாளத்தை நோக்கி வேகமாகச் சென்று மீளவும் பூமியைத் தோண்டிக்கொண்டிருக்கும்பொழுது அங்குப் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிற விரூபாக்ஷமென்னும் திக்கஜத்தைக்கண்டு பிரதக்ஷிணஞ்செய்து மேன்மைப்படுத்திப் பாதாள லோகத்தைப் பிளந்துகொண்டே சென்றனர். அங்ஙனம் கிழக்குத் திசையைப் பிளந்த பின்பு தெற்குத் திசையைப் பிளக்கச் சென்றனர். அத்திசையிலும் மஹாபத்மமென்னும் யானையைக் கண்டு வலஞ்செய்துவிட்டு மேற்குத் திசையைப் பிளந்தனர். அங்கும் ஸௌமநஸமென்னும் யானையைக்கண்டு வலம்வந்து க்ஷேமம் விசாரித்து விடைபெற்றுக்கொண்டு பூமியைத் தோண்டிக்கொண்டே வடதிசைக்குச்சென்று அங்கும் பத்ரமென்னும் யானையை வலம் வந்து மேலும் பூமியைப் பிளந்துகொண்டே வடகிழக்குத் திக்கைநோக்கிப் பயங்கரமான வேகத்துடன் பூமியைப் பிளந்தெறிந்துகொண்டே போகையில் அங்கு அனுதியாகக் கபிலாவதாரஞ்செய்து விளங்கிநிற்கிற வாசுதேவனையும், அத்தேவனருகில் புற்களை மேய்ந்துகொண்டிருக்கிற தங்கள் குதிரையையும் கண்டு அவ் வாசுதேவனையே குதிரை திருடினவனாக நினைத்துக் கோபத்தினால் கண்கள் சிவந்து மண்வெட்டிகளையும் கலப்பைகளையும் கற்களையும் மரங்களையும் எடுத்துக்கொண்டு அவரை அடிக்க எதிர்த்தோடிவந்து 'எங்கள் யாகக்குதிரையை நீயன்றோ களவாடிக்கொண்டு போனவன்; அடா! அறிவுகெட்டவனே! இதோ ஸகர குமாரர்களாகிய நாங்கள் இங்கு வந்திருப்பதாகத் தெரிந்துகொள்வாயாக' என்றார்கள். அச்சொல்லைக்கேட்ட கபிலர் மிகவும் சீறிச்சிவந்து ஒரு ஹுங்காரம் செய்ய அந்த ஸகர புத்திரர்களனைவரும் அக் கபிலரது கோபாக்னியினால் சாம்பற் குவியலாகி யொழிந்தனர்.

[ஸகரபுத்திரர்கள் நீறாகி யொழிந்ததை யறிந்த அம்சுமான் கருடனது சொற்படி கங்கையைக் கொணரவேணு மென்று ஸகரமன்னவனுக்குக் கூறினதையும், அம்மன்னவன் சுவர்க்கமடைந்ததையும் கூறுதல்]

இராமா!, ஸகரமன்னவன் தனது புதல்வர்கள் வேள்விக் குதிரையைத் தேடச்சென்று நெடுங்காலமானதை நினைத்துத் தன் பேரனான அம்சுமானை நோக்கி; "குழந்தாய்! நீ மிகவும் வல்லவனாயிருப்பதால் உடனே புறப்பட்டுச் சென்று, உனது தந்தைகள் போன வழியையும், குதிரையைத் திருடினவன் போனவழியையும் கண்டறியக்கடவை; நிலத்துக்குள்ளிருக்

http://acharya.org

கும் பெரிய கொடிய ஜந்துக்களைக் கொல்வதற்குரிய வாளும் ,வில்லுங்கொண்டு புறப்படுவாயாக" என்று கட்டளையிட்டனன். பிறகு அம்சுமானும் அப்படியே செய்ய முயன்று ஆயுதபாணியாய் வேகமாகப் புறப்பட்டனன். தன் சிறிய தந்தைகளால் பூமிக்குள் தோண்டப்பட்ட வழியாகச்சென்று ஆங்காங்குள்ள திக்கஜங்களை வணங்கி விசாரித்துக் கொண்டே போனவளவில் ஸகர குமாரர்கள் நீறாய்க் குவிந்திருக்கு மிடத்தையடைந்து அவர்களனைவரும் செத்துச் சாம்பலாய்க் கிடப்பது கண்டு அழுது புலம்பி அங்கு அருகில் மேய்ந்து கொண்டிருக்கிற யாகக்குதிரையையும் கண்டு ஒருவாறு உள்ளந்தேறினன். பின் சிறியதந்தைகளாகிய அவர்களுக்குத் தர்ப்பணஞ் செய்யவிரும்பித் தண்ணீர் வேண்டித் தேடி நீருள்ள இடம் ஒன்றும் காணப்பெறாது அங்குத் தற்செயலாகத் தன் சிறிய தந்தைகளுக்கு மாமனாகிய கருடனைக் கண்டான். கருடனும் அம்சுமானைப்பார்த்து 'புருஷஸிம்மமே! உன் சிறிய தந்தைகளுக்கு நேரிட்ட இவ்வதமானது உலகங்களுக்கெல்லாம் நன்மையை விளைவிக்கத்தக்கதாக விருக்கின்றது. ஆகையால் நீ இதைப்பற்றித் தளர்ச்சியடையவேண்டா. மஹாநுபாவரான கபிலமாமுனிவரால் இம்மஹாபலிஷ்டர்கள் கொளுத்தப்பட்டனர். பிராமணராகையால் அவரால் கொளுத்தப்பட்ட இவர்களுக்கு உலகவழக்கத்தின்படி தண்ணீர் கொண்டு தர்ப்பணஞ் செய்வது வீணாகும்; ஆகவே அங்ஙனஞ் செய்ய நீ முயலவேண்டாம். இமவானுடைய மூத்த புதல்வியாகிய கங்கை யென்னும் நதியிலிருந்து நீர் கொண்டுவந்து இவர்கட்குத் தர்ப்பணஞ் செய்வாயாக. தர்ப்பணஞ்செய்வது மாத்திரமன்றி, அதன் நீரைக் கொண்டு இந்தச் சாம்பலை நனைக்கவும்வேண்டும். ஸகரகுமாரர்கள் அறுபதினாயிரம்பேரும் ஸ்வர்க்கலோகம் அடைய இதுவே உபாயம்; அம்சுமானே! நீ மிகுந்த பாக்யமுடையவனாகையால் குதிரையைப் பெற்றனை. அதைக்கொண்டு ஸகரனிடஞ் செல்வாயாக. நீ மஹாவீரனாயிருப்பதுபற்றி நீயே உன் பாட்டனது யாகத்தை நிறைவேற்ற வல்லவன்' என்று மொழிந்து சென்றனன். பிறகு அம்சுமான் குதிரையைக் கைக்கொண்டு தனது நாடடைந்து யாகத்தில் தீக்ஷைபெற்றிருக்கிற ஸகர மஹாராஜனைக் கிட்டிக் கருடன் சொல்லியபடி தன் சிறிய தந்தைகளின் செயலையும் அவர்களுக்கு நேர்ந்த முடிவையும் தெரியச் சொல்லினன். ஸகர சக்ரவர்த்தியும் அம்சுமான் மொழிந்த அப் பயங்கரமான வார்த்தையைக்கேட்டு நடுநடுங்கிப் பின்பு கிரமமாகச் சாஸ்திரங்களிற் சொல்லியபடி யாகத்தை நிறைவேற்றித் தன் பட்டணத்தைச் சேர்ந்தனன். அவ்வரசனுக்குக் கங்காநதியைக் கொண்டுவர யாதொரு உபாயமும் தோன்றாமல் போய்விட்டது. இப்படி ஸகரமஹாராஜன் வெகுகாலம் வரையில் ஆலோசித்தும் அவ்விஷயத்தில் யாதொரு உபாயமும் தோன்றாமல் முப்பதினாயிரம் வருஷங்கள் ராஜ்யபரிபாலனஞ் செய்து சுவர்க்கஞ் சென்றனன்.

[அம்சுமானுடைய பேரனாகிய பகீரதன் கடுந்தவம்புரிந்ததன் பயனாகக் கங்கையைப் பூலோகத்தில் பெற நான்முகனது அனுக்கிரகம் பெற்றதை முனிவர் கூறுதல்.]

ராமா! பின்பு மந்திரிஜனங்கள் அம்சுமானை அரசனாக விரும்பினர். அவ்வம்சுமானுக்குத் திலீபனென்ற குமாரன் பிறந்தனன். அவ்வம்சுமான் திலீபனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டுக் கங்காநதியைக் கொண்டுவந்து சாம்பலாய்க் கிடக்கும் தன் சிறியதகப்பனார்களை நற்கதியடையச்செய்ய உத்தேசங்கொண்டு இமயமலை யுச்சியிலுள்ள ஒரு தபோவனத்திற்குச் சென்று முப்பத்திரண்டாயிரமாண்டுகள் தவம்புரிந்திருந்துங் கங்கையைப் பெறாமலே ஸ்வர்க்கத்தையடைந்தனன். பின்பு திலீபமன்னவனும் தனது மூதாதையர் அபமிருத்யுவாக மாண்டுபோனதைக் கேட்டுத் தன் தகப்பனாகிய அம்சுமான் கடுந்தவஞ் செய்தும் பயன்பெறாத தறிந்து மனவருத்தங்கொண்டு 'கங்கையைக் கொண்டுவருவது

http://acharya.org

எப்படி? என்று ஓயாமல் மனக்கவலையுற்றிருந்தனன். நாளடைவில் அவனுக்குப் பகீரதனென்னும் குமாரன் பிறந்தனன். திலீபனும் ஸகரபுத்திரர்களை உய்விக்கும் உபாயம் ஒன்றும் தோன்றாமல் வருத்தத்தினால் நோய்வாய்ப்பட்டு, தன் புத்திரனாகிய பகீரதனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வித்துத் தேவலோகஞ் சென்றனன். அப்பகீரதமன்னவன் தனக்கு மகப்பேறில்லாதிருந்தது பற்றி ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்புவித்துக் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவருவதில் மிக்க விருப்பங்கொண்டு இமாலயச் சாரலில் கோகர்ண மென்னும் ஓர் சிறிய பர்வதத்திற்குச் சென்று பிரமனை நோக்கிக் கைகளிரண்டையும் உயரக்கூப்பிக் கொண்டு ஐம்புலன்களையும் வென்று பஞ்சாக்னிமத்யத்தில் நின்று கொடுந்தவம் புரிந்தனன். இவ்வாறு பல ஆயிரமாண்டுகள் செல்ல, பிரமதேவன் அக்கடுந்தவத்திற்கு உவந்து அங்கு எதிரே வந்து நின்று, வரம் வேண்டுமாறு சொல்ல, பகீரத மன்னவன் கைகூப்பி வணங்கி நின்று அத்தேவனைப் பார்த்து "மஹாநுபாவரே! ஸகர குமாரர்களனைவரும் என்னால் கங்கா நதியின் ஜலப் பிரவாகத்தில் தர்ப்பணம் பெறவும், அவர்களது சாம்பற் குவியலானது கங்கா ஜலத்தினால் நனையவும், இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த எனக்குச் சந்தானம் உண்டாகும்படியும் அனுக்கிரகம் செய்தருளவேண்டும்' என்றனன். அது கேட்டு நான்முகக்கடவுள் 'பகீரதனே! நீ விரும்பினவை அப்படியே நடந்தேறும். இதோ இமயமலையின் அருகில் தோன்றுகின்ற இக்கங்கையைத் தரிக்கவல்லவன் உருத்திரன் ஒருவனே யாகையால் அம் மஹாதேவனை வேண்டிக்கொள்வாயாக. கங்கை ஆகாயத்தினின்றும் கீழே வருமாயின் அவ்வேகத்தை இப் பூமியால் பொறுக்க முடியாது. அக்கங்கையைத் தரிக்கவல்லவன் சிவனொருவனே' யென்று சொல்லி, கங்கையை நோக்கி 'இம் மன்னவன் விரும்பியபடி அநுக்கிரஹம் செய்வாயாக' என்று மொழிந்து தேவலோகஞ் சென்றனன்.

[பகீரதப் பிரயத்தினம் ஸபலமாகித் தேவகங்கை நிலவுலகம் வழியாகப் பாதாளம் சென்று சேர்ந்து ஸகர புத்திரர்களை உய்வித்ததை முனிவர் கூறுதல்.]

பிறகு பகீரத வேந்தன் பூமியில் தன்காற்பெருவிரலை ஊன்றிக்கொண்டு அசையாமல் நின்று ஒரு வருஷ காலம் சிவனை நோக்கித் தவம் புரிந்தனன். பின்பு பசுபதி உமையுடன் கூடி அவனுக்குக் காட்சி யளித்து 'அன்ப! கங்காநதியை என் சிரத்தினால் தரித்து உன் மனோரதத்தை நிறைவேற்றுகிறேன்' என்றனன். பிறகு கங்காநதி பகீரதன் கோரியபடி தன் உருவத்தைப் பருக்கச்செய்துகொண்டு பயங்கரமான வேகத்துடன் ஆகாயத்தினின்றும் அரன் சிரம் நோக்கிவர அக்கங்கா தேவியின் செருக்கைக் கண்டறிந்த சிவபெருமான் மிகுந்த கோபங்கொண்டு அக்கங்கையை வெளியில் புறப்படவொட்டாமல் தன்னிடத்திலே மறைந்திருக்கும்படி அடக்க வேண்டுமென்று மனதில் எண்ணி அவ்வாறே செய்தனன்.

அப்புண்ணிய நதி சிவபெருமானுடைய ஜடாமண்டலங்கள் நிரம்பிய சிரத்தில் மறைந்து கஷ்டப்பட்டு எவ்வித முயற்சி செய்தும் அச்சிரத்தினின்றும் பூமியைச் சேர்தற்குச் சிறிதுஞ் சக்தியில்லாமற் கிடந்தனள். இப்படி கங்காதேவியானவள் வெகு வருஷங்கள் அதிலேயே உழன்றுகொண்டிருக்க பகீரதன் கங்கையைக் காணாமல் மீளவும் பெருந்தவம் புரிந்தான். அதற்குச் சிவன் அவன் முன் தோன்றி அவன் உள்ளம் களிக்கும்படி, பிரமதேவனால் நிருமிக்கப்பட்ட பிந்துஸரஸ்ஸென்னும் பெயர்பெற்ற ஒரு ஸரஸ்ஸில் அக்கங்கையை விழ விட்டனர். அதனால் ஏழுப்ரவாஹங்கள் உண்டாயின. ஹ்லாதினி, பாவநி, நளினி யென்னும் மூன்று கங்காப்ரவாஹங்கள் கிழக்கு முகமாய்ப் பெருகிச் சென்றன. ஸுசக்ஷுஸ்ஸு, ஸீதை, ஸிந்து என்னும் மூன்று நதிகள் மேற்கு முகமாய்ப் பெருகிச் சென்றன.

http://acharya.org

ஏழாவதாகிய கங்கா நதிப்ரவாஹ மொன்று பகீரத மன்னவனைப் பின் சென்றது. அப்படிப் பட்ட அப்பகீரத மன்னவன் திவ்யமான ரதத்தின் மீதில் ஏறி முன்னே செல்ல, கங்கை அவனைப் பின்தொடர்ந்து போயினள். அங்கங்கையின் ஜலப்ரவாஹமானது பூமி முழுவதும் பரவிற்று. அப்பொழுது ஜலப்ரவாஹத்துடன் விழுந்துகொண்டிருக்கின்ற மத்ஸ்யங்களாலும் ஆமைகளாலும் முதலைகளாலும் மற்றுமுள்ள ஜல ஜந்துக்களாலும் பூமியானது நிறையப்பெற்றது. பூமியில் கங்கை விழுவது மிகவுமற்புதமா யிருந்தமையால் அதைப் பார்க்க விருப்பங் கொண்டு தேவர்களனைவரும் கூட்டங்கூடிவந்து அவ்விடம் சேர்ந்தனர். அக்கங்கா நதியானது, பகீரதன் எவ்வெவ்விடத்திற்குச் செல்லுகின்றானோ, அவ்வவ்விடமெல்லாம் தானுஞ் செல்ல, அவ்வழியில் ஜஹ்னுவென்னும் மஹரிஷி யாகஞ் செய்துகொண்டிருக்கிற யாகபூமி நேரிட, அதைத் தன் ப்ரவாஹத்தினால் மூழ்கச் செய்தனள். யாகஞ் செய்கின்ற அம்மஹரிஷியும் அதன் செருக்கையறிந்து, யாவரும் வியக்கத்தக்கவாறு அக்கங்கயின் பெருவெள்ளத்தையெல்லாம் குடித்து விட்டனர். பின்பு தேவர்களும் ரிஷிகளும் கந்தருவர்களும் மிக்கவியப்படைந்து அந்த ஜஹ்நுமஹரிஷியினிடம் வந்து பூஜித்துக் கங்கையை அம்மஹாநுபாவருக்குப் பெண்ணாக ஏற்படுத்த, அம்மஹரிஷி உகந்து மீளவும் வெளியிட்டனர். ஆனதுபற்றியே கங்கையானது ஜஹ்நுமஹரிஷியின் பெண்ணாகி 'ஜாஹ்நவீ' என்று சொல்லப்பட்டு வருகின்றது. பிறகு கங்கை பகீரதனுடைய ரதம் போகும் வழியாகப்போய் அவனுடைய காரியஸித்திக்காக கடலில் விழுந்து பாதாளத்திற்குச் சென்று சாம்பலை நனைக்க, ஸகர குமாரர்களும் பாவமெல்லாந் தொலைந்து சுவர்க்கத்தை யடைந்தனர்.

[பகீரதமன்னவன் பிரமனது கட்டளைப்படி கங்கையில் தர்ப்பணம் செய்துவிட்டு நகரம் மீண்டமை கூறுதல்.]

ராமா!, அப்பொழுது பிரமதேவன் வந்து பகீரத மன்னவனை நோக்கி 'ஆண் சிங்கமே! ஸகரமஹாராஜனது குமாரர்கள் அறுபதினாயிரம் பெயர்களும் உன்னால் ஸ்வர்க்கமடைந்தனர். கடல் நீர் எவ்வளவு காலம் இவ்வுலகத்தில் இருக்குமோ, அவ்வளவு காலம் வரையில் ஸகர குமாரர்களனைவரும் தேவர்களைப்போல் விண்ணுலகில் வாழ்ந்திருப்பார்கள்; இக்கங்கையும் உனக்கு மூத்த பெண்ணென்று [பாகீரதி யென்று] எங்கும் கியாதி பெற்று விளங்கப் போகின்றது. அப்பா பகீரதனே! உனக்குப் பூர்விகனாகிற ஸகரனும் அம்சுமானும் உன் தந்தையாகிய திலீபனும் கங்கா நதியைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பியிருந்தனரேயல்லாது கொண்டுவந்தார்களல்லர்; நீ யொருவனே பெருமுயற்சியினால் அரியபெரிய இக்காரியத்தைச் செய்து முடித்து நீடூழிகாலம் உலகம் கொண்டாடும் படி சிறந்த கீர்த்தியைப் பெற்றனை; இனி நீ இதில் தர்ப்பணஞ் செய்துமுடித்து உன் பட்டணம் சேர்வாயாக' என்று சொல்லித் தான் பிரமலோகம் போய்ச் சேர்ந்தனன்—என்று கங்கையின்வரலாற்றை விசுவாமித்திரர் இங்ஙனம் தாசரதிகளுக்கு விரிவாக வுரைத்தனர் எடுத்துரைத்தனர்.

[இராமனுக்கு விசாலாநகரத்தைப் பற்றிய வரலாறு கூறுகின்ற விசுவாமித்திரர், முன்பு தேவாசுரர்கள் பாற்கடல் கடைந்த கதையைக் கூறுதல்.]

பிறகு விசுவாமித்திரர் முதலிய முனிவர்கள் யாவரும் ஓடத்தினால் கங்கையைத் தாண்டிச்சென்று மிகவும் அழகாக விளங்கும் விசாலையென்னும் நகரத்தைச் சேர்ந்தனர். இராமனது கோரிக்கைக் கிணங்கி முனிவர் அந்த நகரத்தின் பற்றிய வரலாறு கூறலுற்றார்

http://acharya.org

“ராமா! முன்பு கிருதயுகத்தில் திதியின் புத்திரர்கள் மஹா பலிஷ்டர்களாக மாத்திரமிருந்தனர்; அதிதியின் புத்திரர்கள் மஹாபலிஷ்டர்களும் மிக்க தார்மிகர்களுமாயிருந்தனர். அந்த இருவகுப்பினரும், ‘நாம் என்ன செய்தால் சாவும் கிழத்தனமும் நோயுமின்றி இருப்போம்’ என்று ஆலோசித்து ‘நாம் பாற்கடலைக்கடைந்து அம்ருதத்தைப் பெறவேண்டும்’ என்று நிச்சயித்தனர். பிறகு வாஸுகி நாகத்தைக் கயிறுகவும், மந்தரபர்வதத்தை மத்தாகவும் ஏற்படுத்திக்கொண்டு அவ்விருவகுப்பினரும் பாற்கடலைக் கடையத் தொடங்கினர். அப்படி ஆயிரமாண்டுகள் சென்ற பின்பு வாஸுகியின் சிரங்களெல்லாம் பயங்கரமாக விஷத்தை வெளியில் கக்க. மத்தாகிய மந்தர பர்வதத்தினுடைய கற்களெல்லாம் வெடித்துப் போயின. இவ்வாறிருக்கையில் நெருப்புப் போல் எரிந்துகொண்டிருக்கிற ஹாலாஹலமென்னும் மஹாவிஷம் மேலே கிளம்பிற்று. அதனால் தேவாஸுர மனுஷ்யர்கள் அனைவருமடங்கிய உலகங்களெல்லாம் கொளுத்தப்பட்டன. பின்பு தேவர்கள் பசுபதியைச் சரணமடைந்து ‘காப்பாற்றவேண்டும், காப்பாற்றவேண்டும்’ என்று துதி செய்ய, அங்கு ஸ்ரீ மஹாவிஷ்ணு எழுந்தருளிப் புன்சிரிப்புடன் சிவனைக்கண்டு ‘தேவாதிபதியே! நீ தேவர்களுக்கெல்லாம் முதலிற் பிறந்தவன். ஆனதுபற்றிப் பாற்கடலைக் கடைகையில், அதில் முதலில் உண்டானது உன்னுடையதன்றோ, ஆகையால் இவ்விஷத்தை அக்ரபூஜையாக நினைத்து அங்கீகரிப்பாயாக’ என்று மொழிந்து மறைந்தனன். பின்பு சிவபிரானும் தேவர்களுக்கு உண்டான பயத்தைக்கண்டும் ஸ்ரீ மஹாவிஷ்ணு நியமனத்தைக்கேட்டும் அந்த ஆலாகால விஷத்தை அம்ருதம்போல் உட்கொண்டனன். பின்பு தேவதைகளும் அசுரர்களும் கடலை மீளவும் கடைகையில் மத்தாகிய மந்தர பர்வதம் பாதாளத்தில் மூழ்கிவிட்டது. அப்போது அனைவரும் ஸ்ரீமஹாவிஷ்ணுவைத் துதித்துப் பிரார்த்திக்க, அவரும் உடனே கூர்மவுருவம் கொண்டு தன்முதுகில் அப்பர்வதத்தைத் தாங்கிக்கொண்டிருந்தது மன்றியில் அப்பர்வதத்தின் நுனியைக் கையால் அமுக்கிக்கொண்டு தேவதைகளின் நடுவில் நின்று தானுங்கடைந்தார். இங்ஙனம் பல ஆண்டுகள் சென்ற பின்பு தண்டத்தையும் கமண்டலுவையும் தரித்துக்கொண்டு தந்வந்தரியென்னும் தேவலோகத்து வைத்தியன் முதலில் வெளித்தோன்றினன். பின்பு அழகான அப்ஸரஸ் ஸ்திரீகள் அறுபதினாயிரக் கோடிக்கணக்கிற் பிறந்தனர். அவர்களுடன் உண்டான வேலைக்காரிகளும் எண்ணிறந்தவர்கள். பின்பு ஸமுத்ராதி தேவதையாகிய வருணனது புத்திரியான வாருணியென்னுந் தேவதை கடலினின்றும் வெளிவந்து தன்னைக் கைப்பற்றுவார் யாரென்று தேடிக் கொண்டிருக்கையில் அவளைத் தேவர்கள் கைக்கொண்டனர்.

ராமா, பின்பு உச்சைசிரவஸ்ஸென்னும் உயர்ந்த குதிரையும் கௌஸ்துபமென்னும் சிறந்த ரத்னமும் அப்படியே மேலான அமிருதமும் ஸமுத்திரத்தினின்று வெளியாயின. அவ்வமிருதத்தைப்பற்றித் தேவாசுரர்களிருவரும் பெருத்த போர்செய்து குலங்குலமாக மாண்டனர். அப்போது தேவதைகளே அசுரர்களை அதிகமாகக்கொன்றனர். பிறகு அஸுரர்கள் அனைவரும் தமக்கு வலிமை அதிகமாகும்பொருட்டு ராக்ஷஸர்களோடு ஒருமித்துக்கொண்டதால் மிகவும் கொடிய யுத்தம் நடந்தது. அதனால் தேவாசுரர்களனைவரும் அழிந்துபோவதைக்கண்டு விஷ்ணுதேவன் அற்புதமான மோஹினிரூபந்தரித்து அவர்களை வஞ்சித்து அவர்களிடமிருந்து அமிருதத்தைப் பறித்துக்கொண்டு, அப்போது தன்னையெதிர்த்து வந்தவர்களனைவரையும் அம்மஹாவிஷ்ணு வென்றனன். அப்போது மிகக் கொடிதாக நடந்த அத்தேவாசுர யுத்தத்தில் அம்மஹாவிஷ்ணுவின் ஆவேசத்தால் பலம் அதிகரிக்கப்பெற்ற தேவர்கள் அசுரர்களை அடித்துக்கொன்றுவிட்டனர். அதனால் இந்திரன் திரிலோக ராஜ்யம் பெற்று அமிருதம் கைபுகுந்து களித்திருந்தனன்.

http://acharya.org

[திதியென்பவள் இந்திரனைக் கோல்லவல்ல மகனைப்பெறுதற்குத் தவம்புரிந்ததையும்,
இந்திரன் அவளை விநயத்தினால் வஞ்சித்ததையுங் கூறுதல்.]

ராமா! திதி, தன் மக்களான அசுரர்களனைவரும் தேவர்களால் அடியுண்டு மாண்டு போகவே மிகத் துயரமடைந்து காச்யபரென்னும் தன் பர்த்தாவை நோக்கி 'நாதா! மிகவும் பலிஷ்டர்களான தேவர்களால் நம் பிள்ளைகள் யாவரும் அடியுண்டு மாண்டுவிட்டார்களே; ஆதலால் இந்திரனைக் கொல்லவல்லவனும் மூவுலகங்களையும் ஆளத் தக்கவனுமாகிய ஒரு புதல்வனைப் பெற யான் விரும்பித் தவஞ் செய்யப் போகின்றேன், எனக்கு நீர் கருணை செய்து அநுமதியளிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனள். காச்யபரும் 'நீ வேண்டினபடி ஆகட்டும். நீ ஆயிரமாண்டு நிரம்பும் வரையில் சுசியாயிருப்பாயாயின் மூவுலகங்களையும் ஆளவல்லவனும் இந்திரனைக் கொல்ல வல்லவனுமாகிய குமாரனைப் பெறுவாய்' என்றுரைத்து அம்மடந்தையைத் தன் கையினால் தடவி விட்டனர். அதனால் திதி மிக மகிழ்ந்து விசாலாபுரத்திற்குப் பூர்வஸ்தானமாகிய குசப்லவன மென்னும் இவ்விடம் வந்து கடுந்தவம் புரிந்தனள். அப்போது தேவேந்திரன் மிக்க விநயத்துடன் அம்மாதரசிக்குப் பணிவிடைகள் யாவுஞ் செய்துவந்தனன். ஆயிரமாண்டுகள் நிரம்பப் பத்து வருஷங்கள் குறைந்திருக்கையில் திதி இந்திரன் செய்த சுச்ரூஷைக்கு மிகவும் உவந்து அவனைப் பார்த்து 'வானவர்க்கதிபதி! உன் தந்தையைக் கேட்டு, ஆயிரமாண்டு நிறைந்தபின் பிள்ளையைப் பெறும்படி யான் ஒரு வரம் பெற்றேன். அதற்காக யான் தவஞ் செய்துகொண்டிருக்கின்றேன். இன்னும் பத்து வருஷங்கள் குறைவாயிருக்கின்றன. அப் பத்து வருஷங்கள் நிறைந்த பின்பு உனது உடன்பிறந்தவனைக் காண்பாய்; அவன் உன்னை வெல்லுவதற்கு மனவெழுச்சி கொண்டிருப்பான். ஆயினும் உனக்காக அவனை யான் சமாதானப்படுத்தி உன்னிடத்தில் நேசத்துடன் இருக்கச் செய்கின்றேன். நீ அவனுடன் கூடி மூவுலகங்களையும் வென்று மனக்கவலை தீர்ந்து சுகமாக வாழ்ந்திருப்பாய்' என்று சுச்ரூஷையாலுண்டான சந்தோஷத்தில் மதிமயங்கி மொழிந்தனள். பின் அத் திதி ஒருநாள் நடுப்பகலில் நித்திரையால் தேகம் பரவசமாகத் $ தலைமாட்டில் காலைவைத்துப் படுத்தனள். இந்திரன் இப்படி அவ்வம்மை சுசிதப்பி நித்திரை செய்திருப்பது கண்டு, இவள் வீண்கருவப்பட்டாளென்று தனக்குள் சிரித்துக்கொண்டு அவளது கர்ப்பத்தைக்கெடுக்க அவகாசம் நேரிட்டதுபற்றி ஸந்தோஷங் கொண்டு அவளது சரீரத்தினுட்புகுந்து அக்கருவை ஏழு துண்டுகளாகப் பிளந்து விட்டனன். இங்ஙனம் இந்திரன் தனது வஜ்ராயுதத்தினால் கருவைப் பிளந்துகொண்டிருக்கையில் அச்சிசு இனிய குரலுடன் அழத்தொடங்கிற்று. பின்பு திதியும் அவ்வழுகுரலைக்கேட்டு எழுந்திருந்தனள். 'குழந்தையைக் கொல்லலாகாது, கொல்லலாகாது' என்று சொல்லிக்கொண்டே எழுந்த திதியைக் கண்ட இந்திரன், கருவைத் துண்டித்தலாகிற அக்காரியத்தைச் செய்துமுடித்துவிட்டு வயிற்றினின்று வெளிவந்துவிட்டனன். வெளிவந்து திதியை நோக்கிக் கைகூப்பி நின்று 'அம்ம! நீர் தூய்மையின்றிக் கால்மாட்டில் தலையை வைத்து நித்திரைசெய்தீர்; அங்ஙனம் நீர் அசுசியாயிருந்த சமயமறிந்து அந்தக்கருவை நான் ஏழாகத்

$ ஆஸநத்திலிருந்துகொண்டே உறங்கும்போது தலைசாய்ந்து காலில் படுவதால் அசுசித்வம்வந்ததென்று சிலர்; வழக்கமாகத் தலை வைக்குமிடத்தில் காலையும் கால்வைக்குமிடத்தில் தலையையும் வைத்துப் படுத்தாளாகையால் அசுசித்வமென்று சிலர்; கிழக்கு தெற்குகளில் தலைவைக்க வேணுமென்கிற நூற்கொள்கைக்கு விரோதமாய்ப் படுத்தாளாகையால் அசுசித்வமென்று சிலர்; மற்றுஞ்சிலர் கிருஷ்ணாஜினத்தின் தலைப்பக்கம் காலையும் கால்பக்கம் தலையையும் வைத்துப் படுத்தாளாகையால் அசுசித்வம் வந்ததென்று கூறுவர். என்று மஹான்கள் எழுதியுள்ளார்கள்.

http://acharya.org

துண்டித்துவிட்டேன்; என்னைக்கொல்வதற்காகவே உண்டாகின்ற அந்தக் கருவை நான் சேதித்ததுபற்றி நீர் என்மீது 'மிகவும் பொறுமைகொள்ளவேணும்' என வேண்டிக் கொண்டனன்.

[திதியானவள் தனது கர்ப்பத் துண்டங்களுக்கு ஒரு நன்மை யுண்டாம்படி இந்திரனிடத்து வரம் பெற்றதையும் விசாலா நகரத்தையாண்ட அரசர்களின் வரலாற்றையும் விசுவாமித்திரர் கூறுதல்.]

ராமா! தனது கர்ப்பம் ஏழு துண்டுகளாகச் செய்யப்பட்டதுபற்றி மிக வருந்தின திதியானவள் இந்திரனை நோக்கி "அப்பா! உன்மீது யாதொரு குற்றமுமில்லை; நான் தூய்மை குன்றியதனால் இங்ஙனம் சம்பவித்ததாதலால் என்னுடைய குற்றமேகாண்; கடந்துபோன தைப்பற்றி இனி என்ன விசாரம்? ஏழு துண்டுகளாகச்செய்யப் பெற்ற இவற்றுக்கு ஒரு நன்மையை வேண்டிக்கொள்கிறேன்; அதாவது "இவ்வேழும் ஏழு குழந்தைகளாய் வளர்ந்து ஸப்த மருத்துக்களின் உலகத்தைப் பாதுகாக்கவேண்டும். ஒன்று பிரம லோகத்திலும், மற்றொன்று இந்திர லோகத்திலும், வேறொன்று விஷ்ணுலோகத்திலும் சஞ்சரிக்கவேண்டும்; மற்ற நான்கும் உனதுகட்டளையிலடங்கித் திசைகளில் திரியக் கடவன; இவை 'மாருதர்கள்' எனப்பெயர் பெறுக" என்றனள். இந்திரனும் அது கேட்டு 'அவ்வண்ணமே யாகுக' என்றனன்.

ராமா! அந்தத் திதியும் இந்திரனும் குசப்லவன மென்கிற ஆச்ரமத்தில் இவ்வாறு முடித்துக்கொண்டு தேவலோகம் போய்ச் சேர்ந்தனர். திதிக்கு இந்திரன் பணிவிடை செய்து வந்தஇடம் இதுவே காண். தாசரதீ! இக்ஷ்வாகு மன்னனுக்கு அலம்புஸை யென்பவளிடத்தில் தோன்றிய விசாலர் என்பவரால் விசாலை யென்கிற இந் நகர் ஏற்படுத்தப்பட்டது. அந்த விசால மன்னவனுக்குப் பிறகு ஹேமசந்திரர், ஸுசந்திரர், தூமிராச்வர், ஸ்ருஞ்ஜயர், ஸஹதேவர், குசாச்வர், ஸோமதத்தர், காகுத்ஸ்தர் என்கிற புத்திர பரம்பரை நிகழ்ந்து வந்தது. அந்தக் காகுத்ஸ்தருடைய மகனாகிய ஸுமதி யென்பவரே இப்போது இந்த நகரை அரசுபுரிந்துவருகின்றார். இன்றிரவு நாம் இங்குத் தங்கியிருந்து நாளை காலை மிதிலை சேர்ந்து ஜனக மன்னவனைக் காண்போம் — என்று விசுவாமித்திரர் கூறினர். பின்பு அந்த சுமதி மன்னவன் இவர்களது வருகையை யறிந்து உபசாரங்கள் செய்ய வந்து அன்றே தான் மகா பாக்கியசாலியானதாக விண்ணப்பஞ் செய்துகொண்டனன்.

[அகலியையின் முன் செய்திகளை விசுவாமித்திரர் இராமனுக்குக் கூறுதல்.]

விசாலா நகராதிபதியான சுமதி மன்னவன் பலவகையான உபசாரங்களையும் நிகழ்த்திவிட்டு, மிக அழகிய இவ்வரச குமாரர்கள் இக் கடுங்கானத்தில் எதற்காக அழைத்து வரப்பட்டனர்? —என்று விசுவாமித்திரரைக் கேட்க, அவரும் வேள்விகாத்த விசேடங்களையெல்லாம் எடுத்துக் கூறினர். அதனால் அந்த தாசரதிகளின் பெருமையை நன்கு அறியப் பெற்ற அம் மன்னவன் அக் குமாரர்களுக்குத் தக்கவாறு பூஜைகளைச் செய்தனன். அன்றிரவு தங்கியிருந்து அனைவரும் மறுநாட் காலை மிதிலாபுரிக்குப் புறப்பட்டனர்.

வழி யிடையே மிக அழகிய ஓர் பழைய ஆச்ரமத்தைக் கண்ட இராமபிரான் முனிவரை நோக்கி, 'இவ்விடம் வாஸமற்றதுபோல் காண்கிறதே; இது யாருடையது?' என்று கேட்டனன். அதற்கு விசுவாமித்திரர் கூறத் தொடங்கினர்—

http://acharya.org

ராம! இவ்விடம் முன்பு கௌதம முனிவருடைய ஆச்ரமமாக இருந்தது. அவர் தமது மனைவியாகிய அகலியையோடு இங்குப் பலவாண்டுகள் தவமியற்றிப் போந்தார். அப்போது ஒருநாள் இந்திரன் முனி வேடம் பூண்டுவந்து கௌதம முனிவர் வெளியே சென்றிருந்த காலத்தில் அகலியையிடத்தில் தனது தீய நினைவைத் தெரிவித்துக்கொண்டனன். அவளும் அவனைத் தேவேந்திரனென அறிந்து கொண்டு ஒருவாறு மகிழ்ந்து, அவனது விருப்பத்திற்கு இணங்கி யிருந்து, கௌதமர் வருங்காலம் அணுகிவிட்டதை நோக்கி இந்திரனை விரைந்து செல்லுமாறு கூறிப்புறப்படச் செய்தனள். அவ் விந்திரனும் தனது காதல் நிறைவேறப் பெற்றதற்கு உள்ளம் பூரித்து, உடனே கௌதமரைப் பற்றிச் சங்கித்து விரைந்து வெளிப்புறப்பட முயன்றனன். அப்போது அம்முனிவர் நீராடி ஸமித்து முதலியவற்றைப் பறித்துக் கொண்டு ஆச்ரமத்தினுட் புகுவதைக் கண்டு முகம்வாடி நின்றனன். கௌதமர், அப்போது தமது வேடத்தைப் பூண்டிருக்கின்ற இந்திரனைக் கண்டு, அவனது தீய செயலையும் தெரிந்து கொண்டு மிகவும் சினந்து, 'இந்திர! நீ விருஷண மற்றவனாக ஆய்விடுக' என்று சாபமிட்டனர். அப்போது இந்திரனுடைய விருஷணங்களிரண்டும் அற்று நிலத்தில் வீழ்ந்தன. இந்திரனை அங்ஙனம் சபித்த அம் மாமுனிவர், அகலிகையையும் மேல்வருமாறு சபித்தனர், நீ பல ஆயிரமாண்டளவும் உணவின்றிக் காற்றை மட்டும் அருந்திக்கொண்டு சாம்பலில் வீழ்ந்து தவித்துக் கிடப்பாயாக; ஒருவர் கண்ணிலும் புலப்படாமல் இவ் வாச்ரமத்திலேயே இருப்பாயாக; தசரதாத்மஜனாகிய ஸ்ரீ ராமன் இவ்விடம் நோக்கி எழுந்தருளும்போதுதான் நீ தூய்மைபெறுவாய்; அப்போது நிஜ உருவம் பெற்று அப் பெருமானை ஆராதித்து என்னருகில் வந்து சேருவாய்' என்றனர். ராமா! கௌதம முனிவர் இங்ஙனம் சாபமிட்டு இமய மலையுச்சியில் தவம் புரியச் சென்றனர்.

ராம! பிறகு இந்திரன் விருஷணமற்றவனாய் மிக வருந்தி ரிஷி கணங்களையும் தேவ கணங்களையும் திரட்டி அவர்களை நோக்கி இங்ஙனம் கூறினன்—'நான் தேவர்கட்குக் காரியஞ் செய்யப்போய் இப் பாடு பட்டேன்; கௌதமருடைய தவத்திற்கு இடையூறு விளைப்பது தேவர்களுக்கு அவசியமாதலால், 'அம் முனிவர் கோபமடைந்து சாபங் கொடுத்துத் தவங் குலையப் பெறட்டும்' என்று நான் கருதி ஒரு தீய செயல் செய்யும் வியாஜத்தினால் அவர்க்குக் கோபத்தை யுண்டாக்கிச் சாபமிடச் செய்து அவரது தவநிலையைக் குலைத்தேன், இங்ஙனம் தேவகாரியஞ் செய்த எனக்கு நீங்கள் யாவருஞ் சேர்ந்து உதவி செய்து என்னை விருஷண முடையவனாகச் செய்தல் வேண்டும்' என வேண்டினன். அவ்வேண்டுகோளுக் கிணங்கிய அவர்கள் பித்ரு தேவதைகளிடஞ் சென்று இந்திரனுக்கு நேர்ந்த குறையைத் தெரிவித்து, 'பித்ருக்களே! யாகத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மேடத்தினுடைய விருஷணங்களைக் கொய்து இந்திரனுக்கு அளித்திடவேண்டும்; அதனால் இந்திரன் விருஷணம் பெற்றவனாகிக் குறை தீர்ந்திடுவான்; விருஷண மற்றதாகச் செய்யப்பட்ட மேடத்தின் மாமிசம் உங்களுக்கு மிகுந்த களிப்பை விளைக்கும்; ஆதலால் விரைவில் இங்ஙனஞ் செய்தல் வேண்டும்' என்று கூற, அவர்களும் உடனே அங்ஙனமே செய்திட்டனர். ராம! அது முதலாகவே பித்ரு தேவதைகள் விருஷண மற்ற மேடத்தின் மாமிசத்தை வேள்விகளில் உண்கின்றனர் என்று சொல்லிக்கொண்டே விசுவாமித்திரர் ஸ்ரீராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு கௌதம முனிவரது ஆச்ரமஞ் சேர்ந்தனர்.

[அகலியை சாபந்தீர்ந்து இராமனைப் பூசித்தல்.]

செல்லுகையில் ராமபிரானது திருவடித்துகள் படப்பெற்று வடிவம் பெற்றெழுந்த அகலியையை அனைவரும் கண்டனர். கௌதம முனிவர் முன்பு சாபவிடை கூறியிருந்த

http://acharya.org

வண்ணமே. ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதிருந்த நிலைமை நீங்கிக் கண்ணிற் காணலானாள். மஹாமுனிவருடைய மனைவியென்கிற கௌரவ புத்தியால் தாசரதிகளினால் வணங்கப்பெற்ற அவ்வகலிகை முன்பு கௌதமர் சொல்லியிருந்ததை ஸ்மரித்து இராமபிரானுக்கு உரிய பூஜைகளைச் செய்தனள். அப்போதே இஃதுணர்ந்த கௌதம முனிவரும் ஆங்கு வந்து சேர்ந்து, தூய்மைபெற்ற அகலிகையோடுகூடி விளங்கி, இராமனுக்குப்பூஜைகளைச் செய்து பழைய படி தவத்திலே ஊன்றினர். பிறகு விசுவாமித்திரர் முதலியோர் மிதிலைக்குப் புறப்பட்டனர்.

[விசுவாமித்திரர் தாசரதிகளுடன் மிதிலையில் ஜனக மன்னவனது வேள்விச்சாலையில் புகுதலும், ஜனகன் உபசரித்தலும்:]

கௌதம முனிவரது ஆச்ரமத்தில் நின்று வட கீழ்த்திசையிற் சென்று மிதிலை சேர்ந்து ஜனக மன்னவனது வேள்விச்சாலையருகிற் சேர்ந்தனர் ஸ்ரீராமாதிகள். அங்கு யஜ்ஞ ஸம்பாரங்கள் வெகு ஆச்சரியமாகவும் அழகாகவும் மிகுதியாகவும் சேகரிக்கப்பட்டிருப்பது கண்டு வியந்துகொண்டே இனியதோர் விடுதியில் சென்று அமர்ந்தனர். ஜனகமன்னவனும் விசுவாமித்திர முனிவர் எழுந்தருளி யிருப்பதறிந்து தனது புரோஹிதரும் கௌதம புத்திரருமான சதானந்த முனிவரை முன்னிட்டுக் கொண்டு உபசாரங்கள் செய்ய வந்தனன். முனிவரும் உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு ஜனக சக்ரவர்த்தியை நோக்கி யோகக்ஷேமங்கள் விசாரித்துவிட்டு ஆஸனத்தில் வீற்றிருந்தனர். பிறகு அனைவரும் உட்கார்ந்தனராக, ஜனக மன்னவன் முனிவரை நோக்கி மிகுந்த வினயத்துடன் கூப்பிய கையனாய் "காணவினிய இக்குமாரர்களைப் பற்றின வரலாறுகளைக் கேட்க விரும்புகின்றேன்" என்றுரைக்க மாமுனிவர், இவர்கள் தசரத மன்னவனது புதல்வர்கள் என்பதையும், தமது யாகத்தை நிறைவேற்றிக்கொள்ள அழைத்து வரப்பட்டது முதலாக அகலிகையின் சாபம் தொலைத்த திருகவுள்ள நடத்தைகளையும் சொல்லி முடித்தனர்.

— வான்மீகி ராமாயணத்தில் மிதிலா நகர ப்ராப்தி கட்டம் முற்றிற்று. —

பாலகாண்டத்தில் முப்பத்தோராவது ஸர்க்கத்திலிருந்து
ஐம்பதாவது ஸர்க்கம் முடியுமளவுமுள்ள கதைப்பகுதி முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ ர ஸ் து .

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# श्रीभाष्यसारार्थसंग्रहः ॥

# ஸ்ரீபாஷ்யஸாரார்த்த ஸங்க்ரஹம்.

## ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றியது.

श्रीरामानुजवपुषा वरवरमुनिवर्यदिव्यवपुषा च । अवतीर्य निगममकुटद्वयाभिरक्षी गतिस्स शेषो नः ॥

ये शारीरकमीमांसासारं श्रीभाष्यरीतितः । जिज्ञासन्ते सतां तेषां मुदे कृतिरुदेत्यसौ ॥

श्रीभाष्यसारार्थनिरूपणेन श्रीभाष्यकारांघ्रिसरोजभक्तिम् ।
अण्णङ्गरार्यः परवादिभीकृत् प्रख्यापयत्यद्य सतां नियोगात् ॥

वात्सल्यवारांनिधयो महान्तो दोषाविलामप्यमितादरेण ।
एनां कृतिं वीक्ष्य मुदं गरिष्ठामवाप्तुमर्हन्ति , जनैः किमन्यैः ॥

வேதம் கர்ம காண்டமென்றும் ப்ரஹ்ம காண்டமென்றும் இரு வகுப்பாகவுள்ளது. பூர்வ பாகம் கர்மகாண்டமென்றும் உத்தரபாகம் ப்ரஹ்ம காண்ட மென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்ம காண்டமென்பது. பகவானுக்கு ஆராதந ரூபங்களான யஜ்ஞம் முதலிய கர்ம விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்டமென்றும், அந்த கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை விரிவாகக்கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்டம் (அதாவது உபநிஷத்து) என்றும் சொல்லிற்றாயிற்று.

கர்ம காண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமினி யென்னும் மஹர்ஷி யெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸை யென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமினி மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும், மேல் நான்கு அத்யாயங்கள் காசக்ருத்ஸ்ந ரென்பவரால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரம் அப்ரஸக்தம். "ஜைமினீயம் ஷோடச லக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. வ்ருத்தி க்ரந்தத்தில் பதினாறு அத்யாயங்களும் ஜைமினி ப்ரோக்தமென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்துக்குப் பெயர்.)

ப்ரஹ்ம காண்டமென்னும் உபநிஷத்பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷியெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்ட வொரு சாஸ்த்ரத்தை

http://acharya.org

இயற்றினர். அதற்கே சாரீரக மீமாம்ஸை யென்று பெயர். உத்தர மீமாம்ஸையென்றும் வழங்குவர். ப்ரஹ்ம ஸூத்ரம் என்பது இதனையே. ஒவ்வொரு அத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரக மீமாம்ஸை யென்றதாயிற்று.

இதில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஓரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும் பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்றுநாற்பத்தைந்து ஸூத்ரங்களையுங் கொண்டது ப்ரஹ்ம ஸூத்ரமென்றதாயிற்று.

தத்வ ஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்துகொள்வதற்கு உபநிஷத்துக்களே ஸாதனமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யயமற நிஷ்கர்ஷித்து விளக்கக் கூடியது இந்த ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமே யாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. ப்ரஹ்மஸூத்ரமென்கிற சாரீரக மீமாம்ஸையின் பொருளை நிஷ்கர்ஷமாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்து கொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்ம ஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார்.

மஹர்ஷி ப்ரணீதங்களான ஸூத்ரங்களின் பொருளை நம் போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால், நம் போன்ற அல்ப மதிகளிடத்தில் பரம கருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றி யுள்ளார்கள். த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை. இம்மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசார்ய ஸ்வாமிகள் பாஷ்யம் இயற்றினர். த்வைத மதத்திற்காக ஆனந்ததீர்த்த ஸ்வாமிகள் (மத்வாசார்யர்) பாஷ்யமியற்றினர். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமியெம்பெருமானர் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்தார். வட இந்தியாவில் அதிக ப்ரஸித்தி பெற்றுள்ள வல்லபமதம் நிம்பார்க்க மதம் முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவமதத்திற்காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் மதத்ரயபாஷ்யமென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப் பட்டுலாவுவன.

விசிஷ்டாத்வைதிகளென்றும் ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் பகவத்ராமாநுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப் படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாது வென்பது சொல்லாமலே விளங்கும். உபநிஷத்துக்களின் உண்மைப்பொருளை விளக்கி ஸூத்ர காரருடைய உள்ளத்திற்கு அநுகுணமாக நிஷ்பக்ஷபாதமாய் நிரூபிக்கப்பட்டது ஸ்ரீராமாநுஜ பாஷ்யமே யென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள்.

அந்த ஸ்ரீபாஷ்யத்தின் உண்மைப் பொருளானது ச்ருதப்ரகாசிகை முதலிய வியாக்கியான நூல்களின் உதவியினால் உணரப் படவேண்டும். அதற்கு ஸாமான்ய சாஸ்த்ரங்களின் உதவி இன்றியமையாதது. அப்படிப்பட்ட சாஸ்த்ரஜ்ஞர்கள் நெடுநாள் குருகுல வாஸம் செய்து ஸ்ரீபாஷ்யத்தை யதிகரித்து பாஷ்யாதிகாரிகளென்று பேர் பெற்றுச் சிறந்த வேதாந்திகளாகித் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக உணர்ந்து நிரதிசயானந்தசாலிகளாகின்றனர். அவ்வளவு அதிகாரம் வாய்க்கப் பெறுதவர்களையும் கைவிடமாட்டாத

http://acharya.org

கருணை மிக்க நம் பூருவாசாரியர்கள் திவ்ய ப்ரபந்த தத் வ்யாக்யானங்களையும் ரஹஸ்ய தத் வ்யாக்யானங்களையும் மற்றும் பல திவ்ய க்ரந்தங்களையுமருளிச்செய்துள்ளார்களாதலால் ஸ்ரீபாஷ்யத்தில் நேராக அவகாஹிக்க மாட்டாதவர்களும் இழவாமல் அதில் விவரிக்கப் பட்டுள்ள தத்வ ஹித புருஷார்த்தங்களை ஸதாசார்ய ஸகாசத்தில் உணரப் பெறுகின்றார்கள். அன்னவர்களது ஞானத்திலும் ஒரு குறையில்லை. குற்றமில்லை யென்பது மாத்திரமேயல்லாமல் ஸ்ரீபாஷ்யாதிகாரிகளைக் காட்டிலும் மிக விசதமான ஞானத் தெளிவு பெற்றவர்களாகவும் விளங்குகின்றார்கள். ஆனாலும் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் என்ன விஷயம் எந்த விதமாகச் சொல்லப் பட்டிருக்கிறது? என்று தெரிந்துகொள்ளப் பலர்க்கு அபிலாஷை யுண்டு. விஸ்தாரமாகத் தெரிந்து கொள்ளாவிடினும் ஸாரஸங்க்ரஹமாகவாவது தெரிந்து கொள்ளவேணுமென்கிற விருப்பமுண்டாகி, அப்படித் தெரிவிப்பதொரு நூல் தமிழிலுண்டாவென்று பலரும் விசாரிப்பதுண்டு. ஸ்ரீ பாஷ்ய மொழிபெயர்ப்பு, ச்ருத ப்ரகாசிகை மொழிபெயர்ப்பு என்றிப்படி சிலநூல்கள் வெளிவந்தாலும் ப்ரஹ்மஸூத்ரத்தின்ப்ரமேயத்தை ஸாரமாகத் தெரிந்து கொள்வதற்கு உரிய நூல் ஒன்று இருக்கவேண்டியது அவசியமென்றே பலமஹான்கள் கருதுகின்றனர். அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்காகவே இஃது எழுத ஆரம்பிக்கப் பட்டது. ஒவ்வொரு ஸூத்ரத்தின் பொருளையும் விவரிப்பதென்றால் நூல் பெருகிவிடும் அதற்கஞ்சி, ஒவ்வோர் அதிகரணத்தினுடையவும் ஸாராம்சத்தை விளக்கி இது எழுதப்படுகின்றது. பெரும்பாலும் அதிகரண ஸாராவளியின் ஸாரமிது என்று கொள்ளலாம். ஸ்வாமி ஸ்ரீபாஷ்யம் வேதாந்த தீபம் வேதாந்தஸாரம் என்கிற மூன்று திவ்ய க்ரந்தங்களினால் ப்ரஹ்ம ஸூத்ரப் பொருள்களை விரிவாகவும் சுருக்கமாகவும் வெளியிட்டருளினர். அவற்றையும் தழுவி இஃது எழுதப் படுகின்றது. ‘ஆசை பெரிது, அறிவு சிறிது’ என்கிற நிலைமையிலுள்ள எம்போலியர்க்கு இது ஸாஹஸமே யெனினும் *வாத்ஸல்யமேவ பவதோ முகரீகரோதி* என்று தேசிகன் பணித்த கட்டளையிலே உள்ளத்திலுள்ளுறையும் ஆசார்யர்களின் வாத்ஸல்யமே தூண்ட இதனில் கைவைக்கின்றேன். குற்றங்களைந்து நற்றங்கொள்வர் பெரியார்.

## முதல் ஸூத்ரம். [முதல் அதிகரணம்.]

## अथातो ब्रह्मजिज्ञासा ॥ அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா.

**அத**=கர்ம விசாரம் செய்து முடிந்த பிறகு, **அத:**=கர்மவிசாரம் முடிந்த காரணத்தினாலேயே, **ப்ரஹ்மஜிஜ்ஞாஸா**=இச்சைக்கு இலக்கான ப்ரஹ்ம விசாரம் (செய்யத்தக்கது) என்று ஸூத்திரத்தின் மேல் பொருள் அறிக.

கர்ம விசாரத்தைச் செய்து முடித்தவர்கள் அந்தக் கருமங்களினுடைய அற்பமும் அஸ்திரமுமான பலன்களில் நசையொழிந்து மோக்ஷபுருஷார்த்தத்தை விரும்புவர்களாதலால் அப்படிப் பட்டவர்களுக்கு ப்ரஹ்ம விசாரம் செய்யத் தக்கது என்றதாயிற்று. இதை இன்னமும் சிறிது விவரிப்போம். நன்றாக வேதமோதின வொருவர் ஜைமினி மஹர்ஷியின் கர்ம மீமாம்ஸையில் சொல்லப்பட்ட ந்யாயங்களினால் ஜ்யோதிஷ்டோமம் முதலிய யஜ்ஞங்களின் (கருமங்களின்) தன்மை இன்னபடிப்பட்டது, அவற்றை யியற்றவேண்டிய விதமின்னது, அவற்றின் பலனான ஸ்வர்க்கம் முதலியவற்றின் ஸ்வரூபம் இத் தகைத்து என்று இவ் விஷயங்களை அறுதியிடப் பெற்ற பின்பு ஸ்வர்க்கம் முதலிய அந்தப்பலன்கள் நச்வரங்கள் என்று தெரிந்து கொண்டதன் பலனாக அவற்றைப் பெறவேணுமென்கிற விருப்பம் தொலைந்தொழியப் பெறுகின்றார். பரப்ரஹ்ம ப்ராப்தியாகிற மோக்ஷ புருஷார்த்தத்தில் மேலெழுந்தவொரு உணர்ச்சியிருப்பதனால் இதனைப் பெறவேணுமென்கிற விருப்பமும் அவர்க்கு உண்டாகின்றது. இப்படி ப்ரஹ்ம ப்ராப்தியில் விருப்பமுண்டானவாறே, அந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது, அதனைப்பெறுதற்கு உபாயமின்னது, பெற்று அநுபவிக்கும் பலன் இன்னபடிப்பட்டது என்றித்தகைய விஷயங்களை நிர்ணயிக்க வேண்டு மாதலால் இந்த நிர்ணயம் ப்ரஹ்ம மீமாம்ஸையிற் சொல்லப்பட்டுள்ள நியாயங்களினாலேயே விளையக் கூடியது என்க.

http://acharya.org

* **அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா** * என்கிற இந்த ஸூத்திரத்திற்கு இவ்வளவே விஷயமாயிருக்க, இங்கு ஸ்ரீபாஷ்யம் மிக மிக வளர்ந்திருக்கின்றதே ; அவ்வளவு விரிவுக்கு விஷயமென்ன ? என்று பலர் அறிய விரும்பக் கூடும். கேண்மின்.

இந்த ஸூத்ரத்தில் மூன்றே பதங்கள் உள்ளன. (**அத**) என்கிற முதல் பதத்திற்கு 'அதற்குப் பிறகு' என்று அர்த்தம். எதற்குப் பிறகு? என்கிற கேள்வி உடனே உண்டாகின்றது. 'கர்மவிசாரம் செய்துமுடிந்த பிறகு' என்று நாம் அர்த்தம் சொன்னோம். பிறர் இங்ஙனே அர்த்தம் கொள்ளாமல் வேறு அர்த்தம் கொள்ளுகின்றனர். ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியின் ஆநந்தர்யமே **அத**சப்தார்த்தமென்று சங்கர பாஷ்யத்திலுள்ளது. அது பொருந்தாதென்று மறுக்க அவசியம் ஏற்பட்டது. ப்ரஹ்மத்தின்ஸ்வரூபத்தைப்பற்றிப் பிறர் கூறுவதும் அவசியம் மறுக்க வேண்டியதாயிற்று. இவ்விரண்டு விஷயங்களில் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகப் பல பல விஷயங்கள் பெருகின படியால் இவ்விடத்து ஸ்ரீபாஷ்யம் மிக வளர்ந்தது. அவ்விரிவு இங்கு வேண்டாவென்று விடுக்கப்பட்டது. ஸூத்ரத்தின் மேல் இங்குத் தோன்றியுள்ள பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் ஸாரமாக வுணர்த்துகிறோம், உணர்க.

இவ்வதிகரணத்தின் பூர்வபக்ஷம் வருமாறு:—கர்ம மீமாம்ஸையில் அர்த்தவாதாதிகரணத்தில் "ஆம்நாயஸ்ய க்ரியார்த்தத்வாத் ஆநர்த்தக்யம் அததர்த்தாநாம் தஸ்மாதநித்யமுச்யதே" என்கிறவொரு ஸூத்திரத்தினால் ஒரு பூர்வபக்ஷம் கிளப்பப்பட்டது; அதாவது—வேத ஸாமாந்யமும் ஏதேனுமொருகார்யத்தைச் செய்யவேண்டியதாக வுணர்த்தித் தீரவேண்டிய நிர்ப்பந்தமுடையது ; அதைச் செய் இதைச் செய் என்று கர்த்தவ்யார்த்தங்களை நியமேந போதிப்பதே வேதங்களின் க்ருத்யம். அர்த்தவாத ரூபங்களான வேத வாக்யங்களானவை கர்த்தவ்யார்த்த மொன்றையும் போதிக்காமையினாலே அப்படிப்பட்ட வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்க மாட்டாது (இதைச் சிறிது விவரிப்போம்-) "வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாம:" என்பது ஒரு வேத வாக்யம். இதில் ஒரு கருமம் கர்த்தவ்யமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடுத்தவாக்யம் 'வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா' என்பது; முன் சொன்ன கருமத்தில் ஆராதயமான வாயு தேவதையின் ஒரு பெருமையைப் புகழ்ந்து கூறுவது இந்தவாக்யம். "வாயு மிகவும் சீக்கிரமாகப் பலனளிக்க வல்ல தேவதை" என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். இப்படிப்பட்ட வாக்யங்களுக்கு அர்த்தவாத வாக்யமென்று பெயர். இவற்றில் கர்ம விதி ஒன்றுமில்லாமையால் இவை விதி வாக்யங்களல்ல. விதிவாக்யமாயிருந்து கொண்டே ப்ராமாண்யம பெறவேண்டியது முறைமையாயிருக்க, யத்கிஞ்சித்கர்த்தவ்யார்த்த போதகத்வ ராஹித்யத்தாலே விதிவாக்யமாக மாட்டாத அர்த்தவாத வாக்யங்கள் ப்ராமாண்யம் பெறமாட்டா—என்கிற பூர்வபக்ஷம் * ஆம்நாயஸ்யேதி ஸூத்ரத்தினால் கிளப்பப் பட்டது. பிறகு "விதிநாது ஏகவாக்யத்வாத் ஸ்துத்யர்த்தேந விதீநாம் ஸ்யு:" என்கிற ஸூத்ரத்தினால் இதற்குப் பரிஹாரம் சொல்லப்பட்டது. எங்ஙனேயென்னில், அர்த்தவாத வாக்யங்கள் ஒரு கார்யத்தைச் செய்யும்படி விதிக்காமற் போனாலும் ஸமீபத்திலுள்ள விதி வாக்யத்தில் விதிக்கப்பட்டதொரு க்ரியையில் அந்வயிக்கின்ற புகழ்ச்சியைத் தெரிவிப்பதனால் அந்த விதிவாக்யத்தோடுகூட ஏக வாக்யமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறத் தட்டில்லை யென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது ஜைமிநி மஹர்ஷியால். ஆக, விதி வாக்கியங்களுக்கோ அவற்றுக்கு சேஷபூதங்களான வாக்யங்களுக்கோ ப்ராமாண்ய முண்டே யல்லது வேறுவகையன வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் கிடையாது. உலகத்திலும் முதன் முதலாகச் சிறுவர்களுக்கு வ்ருத்த வ்யவஹாரத்தினாலேயே சக்திக்ரஹண முண்டாகிறது. [சக்திக்ரஹணமாவது—இந்த பதத்திற்கு இன்னது அர்த்தமென்கிற வுணர்ச்சி.] வ்யுத்பந்நனான வொருவன் வேறொரு வ்யுத்பந்நனை நோக்கி 'காமாநய' என்கிறான். அதைக் கேட்ட அவன் ஒரு கோவைக் கொண்டு போகிறான். மறுபடியும் அவன் "**காம் நய, அச்வம் ஆநய**" என்கிறான். அதைக்கேட்ட அந்த வ்யுத்பந்நன் கோவைக் கொண்டுபோய்க் கட்டிவிட்டுக் குதிரையைக் கொண்டுவருகிறான். இவற்றைக் கண்டு கொண்டிருந்த வொரு சிறுவன் (**காம்**) என்றதற்கு இன்னது பொருள், (**ஆநய**)

http://acharya.org

என்றதற்கு இன்னது பொருள், (நய) என்றதற்கு இன்னது பொருள்; அச்வமென்றதற்கு இன்னது பொருளென்று அங்கு நடந்த காரியங்களினால் தெரிந்துகொள்ளுகிறான். 'கோ' பதமானது கொண்டுவருதல் கொண்டுபோதல் என்கிற இரண்டு க்ரியைகளில் அந்வயிக்கின்ற வஸ்துவை போதிப்பதனாலே பசுவைச்சொல்லுகின்றது, ஆநய என்கிற பதம் கொண்டுவருவதாகிற க்ரியையைச் சொல்லுமது என்றிப்படி அந்தந்த பதங்களுக்கு சக்தியை க்ரஹிக்கின்றான். எங்கும் இப்படிப்பட்ட வ்யவஹாரங்களினாலேயே அவ்வோ பதங்களுக்கு அவ்வோ அர்த்தங்களில் சக்தி க்ரஹண முண்டாகிறது. ஆகவே இப்படிப்பட்ட வ்யவஹாரங்களெல்லாம் ஏதேனுமொரு கார்யார்த்த பரங்களாகவே காணப்படுதலால் உலகில் எல்லாப் பதங்களும் யத்கிஞ்சித் கர்த்தவ்யார்த்த பரங்களே யென்று நிச்சயிக்கிறான். ஆக இப்படிப்பட்ட வ்யுத்பத்திக்கு இணங்க எல்லாப் பதங்களும் கார்யார்த்தபரங்களே, இப்படி லௌகிக பதங்கள் கார்ய பரங்களென்றுதேறினால் 'ய ஏவ லௌகிகா: த ஏவ வைதிகா:' என்கிற ந்யாயத்தாலே வைதிக பதங்களும் கார்ய பரங்களேயாகும். (கார்ய பரங்களான வாக்யங்களுக்கே ப்ராமாண்யமுண்டு என்றபடி.) ஏவஞ்ச, கார்ய ரூபமல்லாத பர ப்ரஹ்மத்தினிடத்தில் வேதாந்த வாக்யங்களுக்குத் தாத்பர்யமிருக்க முடியாமையினாலே வேதாந்த விசார ரூபமான ப்ரஹ்ம விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதன்று—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாயிற்று.

இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:—சிறுவர்களுக்கு முதல் வ்யுத்பத்தி வ்ருத்த வ்யவஹாரத்தினாலேயே உண்டாகிறது என்பது பிசகு; இது எல்லாருடையவும் அநுபவத்திற்கு விருத்தமானது. உலகில் அவரவர்களுக்கு முதல் வ்யுத்பத்தி உண்டாகிற விதம் வேறு வகையாகவே அநுபவ ஸித்தமாகவுள்ளது. எங்ஙனே யென்னில், தந்தை தாய் முதலியவர்கள் தம்தம் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தியை யுண்டு பண்ண வேண்டி கண்ணிற் காணும் பல பல பொருள்களை விரலால் சுட்டிக்காட்டி 'இதோ சந்திரன், இதோ கிளி, இதோ குதிரை, இதோ மாமா' என்றிப்படி ப்ரயோகித்து வருகிறார்கள். சிசுக்களும் பூர்வஜந்ம வாஸனையினால் காலக்ரமேண அவ்வோ பதங்களுக்கும் அவ்வோ அர்த்தங்களுக்குமுள்ள ஸம்பந்தத்தைத் திடமாக வுணர்ந்து வ்யுத்பத்தி பெறுகின்றன. ஒரு கார்யத்தில் அந்வயித்த வஸ்துவிலேயே முதன் முதலாக சக்தி க்ரஹணமுண்டாகிறதென்றதற்கு மாறாக ஒரு கார்யத்திலும் அந்வயியாத வஸ்துவிலேயே முதன் முதலாகப் பதங்களுக்கு சக்திக்ரஹண முண்டாகின்றதென்று ஸமர்த்திக்கப்பட்டது.

கார்யபரமான வாக்கியத்திலிருந்தே சக்திக்ரஹண முண்டாகிறதென்பதும் மிகவும் தவறு. 'தேவதத்தா! உனக்குப் பிள்ளை பிறந்தது' என்பதாக ஒரு வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இது ஸித்தார்த்தபரமான வாக்கியமே யொழிய 'காமாநய, காம் நய' இத்யாதி வாக்யங்கள்போலே கார்யபரவாக்கியமன்று. இந்த வாக்கியத்தினாலும் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தி விளையக் காணுகின்றோம். தேவதத்தனுக்குப் பிள்ளை பிறந்தவுடனே வேறோரிடத்திலிருந்த அவனுக்கு இதைத் தெரிவிப்பதற்காக ஏவப்பட்டவொருவன் 'தேவதத்த! புத்ரஸ்தே ஜாத:' என்கிறான். அவ்யுத்பந்நனான வொருவன், தேவதத்தனுடைய க்ருஹத்தில் அவனுக்குப் பிள்ளை பிறந்ததையும் அதைத் தெரிவிப்பதற்காக வொருவன் ஏவப்பட்டதையும் அவன் கூறினதைக்கேட்டு தேவதத்தனுக்கு முகவிகாஸ முண்டானதையும் நோக்கி "புத்ரஸ்தே ஜாத:" என்ற வாக்கியத்திற்கு இன்னது பொருளென்று உணரப்பெறுகிறான். ஆகவே கார்யபரமான வாக்கியத்திலிருந்தே சக்திக்ரஹண மென்கிற நியதி இல்லையென்றதாயிற்று. சில விடங்களில் ஸித்தபரமான வாக்யத்திலிருந்தும் கார்ய அநந்விதவஸ்துக்களில் சக்திக்ரஹண முண்டாகிறது; சிலவிடங்களில் கார்யபர வாக்கியத்திலிருந்தும் உண்டாகிறது என்று லோகாநுபவத்தினால் ஸித்திக்கிறபடியால் ப்ராபாகரர்கள் ஸகலபதங்களும் கார்யார்த்த பரங்களென்று கூறுவது யுக்தியற்றதென்று தேறிற்று. ஆகவே வாக்கியங்களுக்கு ஸித்தரூபமான ப்ரஹ்மத்தில் தாத்பர்யம் ஸம்பவிக்கலாமாகையாலே தத்விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதே யென்று ஸித்தாந்தமானதாக முடிந்தது.

http://acharya.org

இங்கு இப்படிப்பட்ட பூர்வபக்ஷம் தோன்றி இதற்குப் பரிஹாரம் செய்வதாகிற விஷயம் இந்த ஸூத்ரத்தில் எங்ஙனம் கிடைக்கிறதென்று கேள்வி தோன்றும். கார்யத்தில் அந்வயியாத ப்ரஹ்மமாகிற ஸித்தவஸ்துவை ஜிஜ்ஞாஸ்யமாக இங்குக் கூறியிருப்பதனால் இதிலிருந்து இந்தப் பூர்வ பக்ஷஸித்தாந்தங்கள் நிர்ணயிக்கப்படக் குறையில்லை. வேதாந்த வாக்கியங்களெல்லாம் கார்யபரங்களாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுமேயல்லது ஸித்தபரங்களாய்க்கொண்டு ப்ராமாண்யம் பெறமாட்டாதென்கிற வாதம் ஸமஞ்ஜஸமாயிருந்தாலன்றோ வேதாந்த வாக்யங்களினால் ஸித்தரூபமான ப்ரஹ்மத்தை விசாரிப்பது கூடாதென்று சொல்லநேரும்.

முதலில் நாமெடுத்துக்காட்டிய பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்களிரண்டினால் தேறின வர்த்தம் இப்போது விரோதிக்கிறதாக இனி நினைக்கக்கூடும். கார்யபரங்களல்லாத ஸித்தபர வாக்கியங்களுக்கு ஸ்வாதந்த்ர்யேண ப்ராமாண்யம் அஸம்பாவிதமென்றன்றோ அங்கு ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று சங்கிக்கநேரும். இந்த சங்கை வேண்டா. எல்லா வேத வாக்கியங்களும் கார்யபரங்களாய்க்கொண்டே ப்ராமாண்யம் பெறுமென்று பூர்வபக்ஷி சொன்னதை அப்படியே ஒப்புக்கொண்டு அப்யுபகம்யவாத முறையில் பரிஹாரம் காட்டினார் ஜைமினிமஹர்ஷி. அதுவே அவருடைய அபிப்ராய மென்பது கிடையாது கார்யபரமல்லாத அர்த்தவாத வாக்கியங்களும் விதி சேஷமாய்க்கொண்டு ப்ராமாண்யம் பெறுகின்றனவென்று சொன்ன வளவால் ஸித்தபர வாக்யங்களுக்கு ப்ராமாண்யமே கிடையாதென்று சொன்னபடியாகாது. ஆகவே இந்த ஸூத்ரத்தில் செய்யப்படுகிற ஸித்தாந்தமானது பூர்வ மீமாம்ஸா - அர்த்தவாதாதிகரண ஸித்தாந்தத்திற்கு விருத்தமன்று என்றதாயிற்று.

இதில் (அத அத:) என்கிற இரண்டு பதங்களினால் கர்ம விசாரத்திற்குப் பிறகு, கர்மவிசாரம் முடிந்ததென்கிற காரணத்தாலேயே, ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கதென்று கிடைப்பதனால் ப்ரஹ்மவிசாரத்தைக் குறித்துக் கர்ம விசாரம் நியமேந பூர்வவ்ருத்தமென்று தேறுகின்றது. இதைப்பற்றியும் சிறிது விவரிக்கப்படுகிறது. வேதமோதின வொரு புருஷன் வேதவாக்யங்களில் கர்ம பலத்தைப் பற்றியும் பரஹ்மஜ்ஞான பலத்தைப்பற்றியும் ஸ்திரமென்று சிலவிடங்களிலும் அஸ்திரமென்று சிலவிடங்களிலும் மேலெழுந்த வாரியாகவுணர்ந்து இவற்றில் எது உண்மை யென்று நிர்ணயம் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அந்த விருப்பத்தினால் அதை நிர்ணயித்துத் தரக்கூடிய சாஸ்த்ரங்களில் ப்ரவர்த்திக்கிறான். கர்மபலனைப் பற்றின வுண்மையை நிச்சயித்துத்தரவல்ல சாஸ்த்ரங்களில் முந்துறமுன்னம் ப்ரவர்த்திக்கிறான். அநாதிவாஸநையினால் கருமங்களைச்செய்வது எளிதென்று பொதுவாகத் தோன்றியிருக்கும். ப்ரஹ்மஜ்ஞானத்தில் அப்யாஸமில்லாமையினாலே அது துஷ்கரமென்றும் தோன்றியிருக்கும். ஆகவே எளிதான உபாயத்தினால் அபிமதம் கைபுகுவதாயிருக்க அரிதான உபாயத்தில் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்க மாட்டாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞானத்தின் பலனைப்பற்றி நிர்ணயிக்க வேணுமென்கிற விருப்பம் தடைபட்டு, கருமபலனைப் பற்றி நிர்ணயிக்க வேணுமென்கிற விருப்பமே தலையெடுத்திருக்கும். இங்ஙனம் முன்னம் கருமவிசாரம் செய்தவளவில் கருமபலன்கள் அஸ்திரம் என்கிற நிச்சயமுண்டாகிறது. இப்படி நிச்சய முண்டானவளவில், கர்ம விசாரேச்சை தொலைந்ததாகிறது. இந்த கர்ம விசாரேச்சையே முன்பு ப்ரஹ்ம விசாரேச்சைக்கு இடையூறாயிருந்ததனால் இந்த ப்ரதிபந்தகம் தொலையவே ப்ரஹ்ம விசாரத்தில் இச்சையும் அதில் ப்ரவ்ருத்தியும் அடுத்தபடியாக உண்டாகிறது. எனவே, ப்ரஹ்ம விசாரத்தைக் குறித்து கர்ம விசாரம் நியமேந அபேக்ஷிதமென்றதாகிறது. இதுவே பூர்வ வ்ருத்தமாக இருக்கத் தக்கதாதலால் (அத அத:) என்ற பதங்களுக்குப் பதவுரையில் கூறிய பொருளே பொருத்த முடைத்தென்றதாயிற்று.

## இரண்டாவது—ஜந்மாத்யதிகரணம்.

உலகில் ஒன்றைத்தெரிந்துகொள்ளவேணுமானால் லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அப்படியே பரப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ளவேணுமானு

http://acharya.org

னும் ஒரு லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்துகொள்ளவேண்டும். நாம் கண்ணால் காணக்கூடிய பொருள்களுக்கே லக்ஷணம் கூறமுடியுமே யல்லது கண்ணுக்குப் புலப்படாத பொருளுக்கு லக்ஷணம் கூறமுடியாது. பரப்ரஹ்மமோ கண்ணுக்குப் புலப்படாததே யன்றிப் புலப்படுமதன்று. ஆகவே அதற்கு ஒரு லக்ஷணம் கூற இயலாதபோது அது தெரிந்து கொள்ளமுடியாததென்று தேறிவிட்டபடியால் அந்தப் பரப்ரஹ்மத்தைப் பற்றின விசாரம் எப்படி செய்ய ப்ராப்தமாகும்? என்று ஆக்ஷேபம் தோன்ற, அவ்வாக்ஷேபத்தைப் பரிஹரிக்க இந்த அதிகரணம் எழுகின்றது.

जन्माद्यस्य यत: ॥ ஜந்மாத்யஸ்ய யத: (1-1-2)

ஜந்மாதி, அஸ்ய, யத: என்று மூன்றுபதமாக வுள்ளது இந்த ஸூத்ரம். **அஸ்ய**—கண்ணால் காணப்படுகிற இந்த சேதந மிச்ரமான பிரபஞ்சத்திற்கு, ஜன்மாதி—உத்பத்தி ஸ்திதி, ப்ரளயங்கள், **யத:**—எந்த வஸ்துவினிடத்தினின்று ஆகின்றனவோ, [அதுதான் பரப்ரஹ்மம்] என்பதாக ஸூத்ரத்தின் பொருள்.

தைத்திரீயோபநிஷத்தில் ப்ருகுவல்லியென்னும் ப்ரகரணத்தி லுள்ளதான **"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி, தத் விஜிஜ்ஞாஸஸ்வ, தத் ப்ரஹ்மேதி"** என்னும் வாக்யமானது பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைச் சொல்லி யிருக்கின்றது. உலகில் நாம் ஆடு மாடுகளுக்கு ஒவ்வொரு லக்ஷணத்தைக் கொண்டு இதர பேதத்தை எப்படி நிச்சயிக்கிறோமோ அப்படியே ப்ரஹ்மம் கண்ணுக்குப் புலப்படாததாயிருந்தாலுங் கூட ஜகஜ் ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைக் கொண்டு சேதநா சேதநங்களிற் காட்டில் வேறுபட்டதென்று நிச்சயிக்க முடியுமாதலால் அப்படிப் பட்ட ப்ரஹ்மத்தைப் பற்றின விசாரம் கூடும் என்றதாயிற்று.

**இங்கே பூர்வபக்ஷம்:**—ப்ரஹ்மத்திற்கு ஜந்ம காரணத்வம் முதலானவை லக்ஷணமாக ஸம்பவிக்கமாட்டாதென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது. **"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே"** இத்யாதியாக எடுத்துக்காட்டின உபநிஷத் வாக்யத்தில் அந்வய க்ரமம் எப்படி காணவேணு மென்றால், **"யத: இமாநி பூதாநி ஜாயந்தே தத் ப்ரஹ்ம; யேந ஜாதாநி ஜீவந்தி தத் ப்ரஹ்ம; யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி தத் ப்ரஹ்ம"** என்று மூன்று வாக்யங்களாகப் பிரித்து அந்வயங் கொண்டு ஜந்மகாரணத்வம் ஒரு லக்ஷணமென்றும் ஸ்திதி காரணத்வம் மற்றொரு லக்ஷணமென்றும் லயகாரணத்வம் வேறொரு லக்ஷணமென்றும் ஆக வ்யாவர்த்தக லக்ஷணங்கள் மூன்று அங்கீகரிக்க வேண்டியதாகின்றது. இப்படியாகுமளவில், ஒரே ப்ரஹ்மம் என்றல்லாமல் பல ப்ரஹ்மங்கள் என்பதாகத்தேறும். வ்யாவர்த்தகங்கள் பலவானால் வ்யாவர்த்யமும் பலவாக வேண்டுகையாலே.

இப்படி யொரு நிர்ப்பந்த முண்டோ? தேவதத்தன் கறுத்தவனுயும் பருத்தவனுயும் யுவாவாயும் செந்தாமரைக் கண்ணனுயு மிரா நின்றான் என்று ஒருவர் சொன்னால் கறுப்பு முதலிய வ்யாவர்த்தகங்கள் பலவாயிருப்பது கொண்டு வ்யாவர்த்யனான தேவதத்தனும் பல வ்யக்திகளாகத் தேறிவிடுவனோ? ப்ரத்யக்ஷமாக ஒரு தேவதத்தனையே நாம் காண்கிறோம். அவ்வொரு வ்யக்தி யினிடத்தில் கருமை,பருமை முதலான பலவும் கூடியிருக்கக்காண்கிறோம். இதுபோல ஒரு ப்ரஹ்மத்தினிடத்திலேயே ஜந்மகாரணத்வம் முதலானவை பலவும் கூடியிருக்கக் குறையில்லையே. இவற்றால் ப்ரஹ்ம வ்யக்தி பஹுத்வம் எப்படி ஆபத்தி பண்ண முடியும்? என்று மத்யே சங்கை தோன்றும். இதற்கு ஸமாதானம், கருமை பருமை முதலிய பலவற்றால் தேவதத்த வ்யக்தியில் பன்மை வந்துவிட மாட்டாதென்பது வாஸ்தவமே, தேவதத்தன் கண்ணுக்குப் புலப்படுமவனாதலால் அவ்விஷயம் வேறு, ப்ரஹ்மம் அப்படி ப்ரத்யக்ஷமன்றே. அதுவோ அப்ரத்யக்ஷமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் ஒன்றிலேயே கூடுமென்று க்ரஹிப்பிக்கவல்ல பிரமாண மெதுவும் புலப்படவில்லை. லக்ஷணங்கள் எல்லாம் இதர பேதத்தை ஸாதித்துக் கொடுக்குமவை என்பது உத்ஸர்க்

http://acharya.org

கத: ப்ராப்தமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வமென்னு மிந்த லக்ஷணங்கள் இதர பேதத்தை [வ்யாவ்ருத்தியை] ஸாதித்துக் கொடுக்குமளவில் இதற்கு அபவாதம் யாதொன்று மில்லாமையினாலே, ஜந்மகாரணத்வமாகிற லக்ஷணமானது என்ன செய்யுமென்றால், தன்னைக் கொண்டு லக்ஷணீயமான ப்ரஹ்மத்திற்கு ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் லய காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே ஸ்திதி காரணத்வரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு– ஜந்மகாரண பூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் லயகாரண பூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே லய காரணத்வ ரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு ஜந்மகாரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். ஆகவிப்படி லக்ஷண பேதங்களினால் ப்ரஹ்ம பஹுத்வம் தேறியே தீரும். இதற்காகப் பல லக்ஷணங்களைக் கொள்ளாமல் "ஜந்ம காரணத்வே ஸதி ஸ்திதி காரணத்வே ஸதி லய காரணத்வம் பரஹ்ம லக்ஷணம்" என்று கொள்ளுகிறோ மென்னில்; இவற்றுள் ஒவ்வொன்றே லக்ஷணமாகப் போருமாதலால் மற்ற விசேஷணங்கள் வ்யர்த்தமாக வேண்டி வரும். மேலும் ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் விருத்தங்களாகையாலே ஓரிடத்தில் இவை கூடியிருக்கவும் மாட்டா.

இதற்குமேல் ஒன்று சொல்லலாம். [அதோ பக்ஷி உட்கார்ந்து கொண்டிருக்கிறதே; அவ்விடந்தான் தேவதத்தனுடைய கழனி] என்று ஒருவன் சொன்னால், தேவதத்தனுடைய கழனிக்கு பக்ஷியின் ஸம்பந்தத்தை லக்ஷணமாகச் சொன்னதாக ஆகிறது. இப்படிப்பட்ட லக்ஷணத்தினால் பக்ஷி யுறையுமிடமான கழனியில் தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்படுகிறது. அதுபோலவே இங்கும் ஜந்ம காரணத்வம் ஸ்திதிகாரணத்வம் லய காரணத்வம் ஆகிற மூன்றையும் ஜ்ஞாபக லக்ஷணங்களாகக் கொண்டு இவற்றால் ஒரே வஸ்து ப்ரஹ்ம பதார்த்தமாகத் தெரிவிக்கப் படுகிறது-என்னலாம்.

இதுவும் பொருந்தாது. த்ருஷ்டாந்தத்தில், கழனியென்கிற வொரு வஸ்து ஏற்கெனவே அறியப்பட்டிருந்தது. அப்படி அறியப்பட்டிருந்தவதில் பக்ஷிவிசேஷத்தின் ஸம்பந்தத்தை யிட்டு தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்பட்டது. அதுபோல இங்கும் தெரிவிக்கப்பட வேண்டிய ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்ததொரு தன்மை சொல்லித் தீரவேண்டும். அதுவோ ஒன்றும் சொல்லமுடியாததாயிருக்கின்றது. ஆகவே ஜந்மகாரணத்வம் முதலியவற்றுக்கு [பக்ஷிவிசேஷஸம்பந்தாதிவத்] ஜ்ஞாபகத்வமும் ஸம்பவிக்க மாட்டாது.

ஏன்? ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்ததொரு தன்மை சொல்லமுடியாதா என்ன? நன்றாகச் சொல்லலாமே "ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸத்யத்வம் முதலானவையே முன்னமறிந்த தன்மைகள் என்னக் கூடாதோ வென்னில்; அங்கும் இந்த தோஷம் ஸமானமேயாகும். ஸத்யத்வாதிகள் ஜ்ஞாபகமாகும் போது ஏற்கெனவே யறிந்த தன்மை யொன்று சொல்லியாகவேண்டும், ஜந்மகாரணத்வாதிகளைச் சொல்லுகிறோமென்னவேணும் அதைத் தெரிந்து கொள்ளாமல் ப்ரஹ்ம பதார்த்தம் தெரிவிக்க முடியாதாதலால் அந்யோந்யாச்ரயம் அபரிஹார்யமாகும். ஆகவே ஜந்மகாரணத்வாதிகள் லக்ஷணமாகப் பொருந்தமாட்டா வென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது.

பரப்ரஹ்மம் ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமல்லாமையாலே அதற்கு ஒரு லக்ஷணமும் சொல்ல முடியாதாதலாலும், லக்ஷணத்தைக் கொண்டே எந்த வஸ்துவையும் அறியவேண்டுமாதலாலும், லக்ஷணத்தின் அஸம்பவத்தினால் அறியமுடியாததான இந்தப் பரப்ரஹ்மத்தைப் பற்றி விசாரம் செய்வதெபபடி? என்கிற ஆக்ஷேபத்தைப பரிஹரித்துக்கொண்டு 'ஜந், மாத்யஸ்ய யத:" என்கிற இரண்டாவது ஸூத்ரம் தோன்றியுள்ளதென்று கூறி பூர்வபக்ஷத்தையும் விவரித்தோம். இனி ஸித்தாந்தம் வருமாறு :—

http://acharya.org

ஒரு வஸ்துவுக்கு ஒருலக்ஷணம் சொன்னோமானல் அந்த லக்ஷணமானது "மற்ற வஸ்துக்களிற் காட்டிலும் இந்த வஸ்து வேறுபட்டது" என்பதை நன்கு காட்டிக் கொடுக்குமென்று சொன்னோம். அப்படி வேறுபாட்டைக் காட்டுவதென்றால் என்ன? என்பதைச் சிறிது தெளிவாகத் தெரிந்துகொள்ள வேணும். விசேஷணங்களைக் கொண்டு நாம் வேறுபாட்டையறியவேணும். விசேஷ்யத்தில் ஏதோ வொரு தர்மம் இருப்பதாக விசேஷணம் காட்டும்; அந்த தர்மத்திற் காட்டிலும் வேறுபட்டதான எந்த தர்மமும் அதில் இருக்கமாட்டாதென்று அதனால் தெரிந்து கொள்ளுகிறோமா? அல்லது அந்த தர்மத்திற்கு விருத்தமான வேறெந்த தர்மமும் அதில் இருக்கமாட்டாதென்று தெரிந்துகொள்ளுகிறோமா? என்று பரிசீலிக்கவேணும். விசேஷணத்தினால் சொல்லப்பட்ட தர்மம் தவிர வேறு எந்த தர்மமும் அதில் [விசேஷ்யத்தில்] இருக்கமாட்டாதென்று தெரிந்துகொள்ளுகிறோமென்று தேறுமாகில் முற்கூறிய பூர்வபக்ஷம் ஊர்ஜிதமாகும். உண்மையோ வென்னில் அப்படியில்லை. ஒரு விசேஷணத்தினால் விசேஷ்யத்தில் ஒரு தர்மம் காட்டப்பட்டதேயானால் அதற்கு எதிரிடையான வேறு தர்மம் அதில் இருக்கமாட்டாதென்று நாம் தெரிந்துகொள்ளலாமே யன்றி அவிருத்தமான வேறெந்த தர்மமும் அதிலிருக்கமாட்டாதென்று நாம் தெரிந்துகொள்ள இயலாது. (உதாரணம்.) "நீலோ வ்ருஷப:" [கறுத்த எருது] என்கிற வொரு வாக்யத்தை யெடுத்துக் கொள்வோம். இதில் கருமை விசேஷணம். எருது விசேஷ்யம். நீல: என்கிற விசேஷணமானது இதர வ்யாவ்ருத்தியை [வேறுபாட்டை]க் காட்டுவதற்காகவே பிரயோகிக்க பட்டது. கறுப்புநிறத்திற்கு விருத்தமான வெளுப்பு சிவப்பு முதலிய நிறங்கள் அந்த எருதினிடத்தில் இல்லையென்று இதனால் நாம் தெரிந்துகொள்ளலாமே யல்லது இதற்கு அவிருத்தமான த்ரவ்யத்வம் முதலிய தர்மங்களும் கூட அதில் இல்லையென்று நாம் தெரிந்துகொள்ளமுடியாது. லோகாநுபவம் அப்படி யில்லை. ஒரு விசேஷ்யத்தில் பல பல தர்மங்கள் இருக்கலாம். விசேஷணத்தினால் அல்லது விசேஷணங்களினால் எந்தெந்த தர்மங்களின் ஸத்பாவம் ஏற்படுமோ அந்த தர்மங்கள் தவிர வேறு எந்த தர்மமும் அந்த விசேஷ்யத்தில் கிடையாதென்கிற ப்ரதிபத்தி ஒரு நாளும் ஒருவற்கும் உண்டாகமாட்டாது. அந்த தர்மங்களோடு முரண்படும்படியான தர்மம் இருக்கமாட்டாதென்கிற ப்ரதிபத்தியே விளையும். "யுவா நீலோ வாமந: பங்குச்ச தேவதத்த:" என்றால் யுவாவாயும் கறுத்தவனாயும் குள்ளனாயும் நொண்டியாயும் தேவதத்தனிருக்கிறான் என்று பொருள்படுகிறது. இதில் யுவா என்கிற விசேஷணமானது யௌவனமுடைய என்று காட்டி, யௌவனமென்கிற அந்த தர்மத்திற்கு விருத்தமான இளமையும் முதுமையுமில்லாதவன் என்று காட்டுமே யல்லது அதற்கு அவிருத்தமான நீலத்வம் வாமநத்வம் முதலிய தர்மங்களுமில்லாதவன் என்று காட்டமாட்டாதன்றோ? இப்படி ஒவ்வொரு விசேஷணத்தையு மெடுத்துக்கொண்டு விமர்சித்தறிக.

விருத்தமான தர்மங்களும் ஏககாலத்தில் இருக்க முடியாதே யொழிய கால பேதத்தினால் அவையும் ஒரே வ்யக்தியினிடத்தில் இருக்கத் தடையில்லை. "நீலவஸ்த்ரதாரீ தேவதத்த:" என்றால் ஒருகாலத்தில் கறுப்புத் துணியை யணிந்தவனாயும் மற்றொரு காலத்தில் வெளுப்புத்துணியை யணிந்தவனாயு மிருப்பதில் விரோதமில்லாமையாலே நீல வஸ்த்ர தாரீ என்கிற இந்த விசேஷணமானது காலாந்தரத்தில் [அடுத்த க்ஷணத்திலேயே] ஸம்பவிக்கக் கூடிய ச்வேத வஸ்த்ரதாரணத்தைத் தவிர்க்கமாட்டாதன்றோ. விசேஷணங்களைப் பற்றி இங்ஙனே தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள் பலவுள.

பிரகிருதத்தில், ஜந்மகாரணத்வம் ஸ்திதிகாரணத்வம் லயகாரணத்வ மென்னுமிவை காலபேதத்தினால் ஒரு வ்யக்தியினிடத்திலேயே ஒன்று சேர்ந்திருக்கக் கூடியவை யாதலால் அவிருத்தங்களேயாகும். விலக்ஷண சக்தி யுக்தமான பர ப்ரஹ்மத்தினிடத்தில் ஏக காலத்திலேயும் இவை கூடும். ஆகவே ஜந்மகாரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் பரப்ரஹ்மத்திற்கு பஹுத்வாபத்தியென்பதில்லை. பர ப்ரஹ்மம் க்ஷேத்ரஜ்ஞர்களின் கருமங்களுக்குத் தக்கபடி ஸ்ருஷ்டி செய்யவேண்டிய காலத்தில் ஸ்ருஷ்டிப்பதும் பிரளயம் செய்யவேண்டிய காலத்தில் ஸம்ஹரிப்பதும் செய்கிறது. உலகில் உழவனானவன் விதை விதைக்க வேண்



http://acharya.org

டிய காலத்தில் அதை விதைப்பதும் அறுக்கவேண்டிய காலத்தில் அறுப்பதும் செய்வது போல் இதனைக் கொள்க.

அன்றியும், உத்தர நாராயணாநுவாகம் முதலானவற்றில் லக்ஷ்மீபதித்வம் முதலிய அஸாதாரண சிஹ்னங்களினால் ப்ரதிபத்திக்கு விஷயமான வஸ்துவானது ஜந்ம காரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் ப்ரஹ்ம பதார்த்தமாக ஜ்ஞாபிக்கப்படுகிறதென்றும் கொள்ளக் குறையில்லாமையாலே இரண்டாவது பக்ஷத்திலும் தோஷமில்லை. [முன்னே விவரிக்கப்பட்ட பூர்வபக்ஷத்தை மீண்டு வாசிப்பது.] ஏவஞ்ச, ஜகஜ்ஜந்மாதி காரணத்வமானது விசேஷணமாகவும் உபலக்ஷணமாகவும் ப்ரஹ்மலக்ஷணமாவதற்கு யாதொரு தடையுமில்லையென்று தேறிற்று. இன்னமும் இங்கு விரிவாகத் தெரிவிக்க வேண்டுமவை பலவுண்டு. அவை சாஸ்த்ரஜ்ஞானிகளுக்கே க்ரஹிக்கவும் ரஸிக்கவுங் கூடியவையாதலால் இங்கு இவ்வளவோடு நிறுத்தப்படுகிறது. ... .... .... (2)

ஜந்மாத்யதிகரணஸாரார்த்தம் முற்றிற்று.

## 3. சாஸ்த்ரயோநித்வாதிகரணம்.

ஜந்மாத்யதிகரணமென்கிற கீழதிகரணத்தில் பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் லக்ஷணமென்று தேறிற்று. இப்படிப்பட்ட லக்ஷணத்தோடு கூடிய பரப்ரஹ்மமானது ப்ரத்யக்ஷப்ரமாணத்தினால் தெரிந்துகொள்ளப்படாமற் போனாலும் அநுமாநப்ரமாணத்தினால்ஸித்திக்கக் குறையில்லாமையாலே அப்படி அநுமாநப்ரமாணஸித்தமாகின்ற அந்தப்பரப்ரஹ்மத்தை வேதாந்தவாக்யங்களினால் விசாரிக்கவேண்டிய அவச்யமில்லை என்றொரு ஆக்ஷேபந்தோன்ற, அதற்குப் பரிஹாரமாக இந்த அதிகரணம் அவதரிக்கின்றது.

**शास्त्रयोनित्वात् ॥—சாஸ்த்ரயோநித்வாத். 1—1—3.**

சாஸ்த்ரத்தை யோநியாகக் கொண்டபடியாலே—என்பது ஸூத்ரத்தின் பொருள். யோநியாவது காரணம்; அறிவதற்குக்காரணம் என்கிற விவக்ஷையினால் இங்கு யோநிசப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது அதாவது—ப்ரமாணம் என்றபடி. சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டபடியாலே என்றதாயிற்று. * அப்பக்ஷோ வாயுபக்ஷ: * என்னுமிடங்களில் 'தீர்த்தத்தைக் குடிப்பவன், வாயுவை பக்ஷிப்பவன்' என்று சப்தார்த்தமானாலும் "அஸதி பாதகே ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்" என்கிற நியாயத்தினால் "தீர்த்த மொன்றையே குடிப்பவன், வாயுவைமாத்திரமே பக்ஷிப்பவன்" என்று பொருள்தேறுவதுபோல, இங்கும் "சாஸ்த்ரமொன்றையே ப்ரமாணமாகக் கொண்டபடியாலே" என்றதாகப் பொருள்தேறும். ஆகவே "சாஸ்த்ரமேவ யோநி: (ப்ரமாணம்) யஸ்ய தத்—சாஸ்த்ரயோநி; தஸ்ய பாவ:—சாஸ்த்ரயோநித்வம்; தஸ்மாத்—சாஸ்த்ரயோநித்வாத்" என்று ஸமாஸம் கொள்ளப்பட்டதாயிற்று. பரப்ரஹ்மமானது அநுமாநத்தை ப்ரமாணமாகக் கொண்டதாகாமல் சாஸ்த்ர மொன்றையே ப்ரமாணமாகக் கொண்டதாகையினால் அப்படிப்பட்ட (வேதாந்த) சாஸ்த்ரத்தினால் பரப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டியது அவச்யமே என்பதாக ஸூத்ரத்தின் பொருள் முடிந்துநின்றது.

இங்குப் பூர்வபக்ஷம்:—"அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத்" என்பர் சாஸ்த்ரவித்துக்கள். வேறு எந்த ப்ரமாணத்தினாலும் ஏற்படாத விஷயத்தில்தான் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்கும்—என்பது இதன்தாற்பரியம். இதன்படி பார்த்தால், பரப்ரஹ்மமானது வேறு எந்த ப்ரமாணத்தினாலும் ஸித்தியாமலிருந்தால்தான் அதில் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்குமென்றும், வேறு ஏதேனுமொரு ப்ரமாணத்தினால் ப்ரஹ்மம் ஸித்தித்துவிட்டால் அதில் சாஸ்த்ரம் ப்ரவர்த்தியாது என்றும் தேறுகின்றது. பரப்ரஹ்மமோ அநுமாந ப்ரமாணத்தினால் ஸித்திக்கக் கூடியதாக இருக்கின்றது. எங்ஙனேயென்னில் "பூம்யங்குராதிகம் ஸகர்த்ருகம்—கார்யத்வாத்; கடவத்" என்பது அநுமாந சரீரம். உலகத்தில் நாம் காண்கிற எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவையுடையன; கர்த்தாவொருவனில்லாமல் எந்தப்பொருளும் உண்டாவதில்லை; வீடு பானை துணி முதலிய எல்லாப்பொருள்களும் ஒரு கர்த்தாவை முன்னிட்டே உண்டானவை யென்பதை அறிகிறோம். இதனால், கர்த்தாவொருவனில்லாமல்

http://acharya.org

எந்தப்பொருளு முண்டாகா தென்கிற உறுதி தோன்றுகின்றது. உடனே மற்றொன்றும் கவனிக்கிறோம்; வீட்டைக் கட்டினவனாக ஒரு கர்த்தா நமக்குத் தெரியவந்தாலும் அந்த வீடு எந்த நிலத்தில் கட்டப்பட்டதோ அந்த நிலத்திற்கு எவன் கர்த்தா என்பது நமக்குத் தெரியவில்லை. வீடுகட்டக் கருவியாயிருக்கின்ற மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தா இன்னானென்று அறிகின்றிலோம். பானையைச் செய்பவன் குயவனென்று காண்கிறோமானாலும் அந்தப்பானைக்கு உபாதாநகாரணமான மண்ணைப் படைத்தவன் இன்னானென்று அறிகின்றிலோம். துணிக்குக் கர்த்தா ஒரு சேணியனென்று அறிகின்றோமானாலும் அதற்கு உபாதாந காரணமாகிய பஞ்சைப் படைத்தவன் இன்னானென்று அறிகின்றிலோம். ஆனால் கர்த்தாவொருவனில்லாமல் ஒரு காரியப்பொருளு முண்டாகாததலால் கீழ்ச்சொன்ன மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தாவொருவன் இருந்தே தீரவேண்டும். அவன்தான் ஈச்வரனென்பவன்—என்று இவ்விதமாக ஈச்வரனையறிவதானது அநுமான ப்ரமாணத்தினா லறிவதாகும். ஆக, இப்படிப்பட்ட அநுமாநமென்னும் பிரமாணத்தினால் ஈச்வரன் ஸித்திக்கவே, இப்படி ப்ரமாணாந்தர ப்ராப்தமாய்விட்ட பரப்ரஹ்மத்தின் விஷயத்தில் சாஸ்த்ரமென்னும் ப்ரமாணம் ப்ரவர்த்திக்க மாட்டாததலால் [* அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத் * என்றன்றோ நியம முள்ளது.], வேதாந்த சாஸ்த்ரமானது ஜகஜ்ஜந்மாதிகாரணபூதமான ப்ரஹ்மத்தினிடத்திலே ப்ரமாணமாக முடியாததலால் அந்த வேதாந்த் சாஸ்த்ர விசாரரூபமான ப்ரஹ்மவிசாரம் செய்யத் தக்கதன்று.—என்பதாகப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாக;

**இதற்குமேல் ஸித்தாந்தம் வருமாறு;—**

அநுமானத்தினால் ஒன்றை ஸாதிப்பதானால் அது செவ்வனே ஸித்திக்கக்கூடிய விஷயமன்று. அநுமானத்தினால் ஈச்வரனே ஜகத்கர்த்தாவாக ஸித்திக்கவேணுமென்கிற நியதியில்லை; ஏனென்னில்; விச்வாமித்ர முனிவர் தவவலிமையினால் மிகுந்த பெருமை பெற்று நூதநஜகத்ஸ்ருஷ்டி பண்ணினாரென்பதை நாம் ஸ்ரீராமாயணாதிகளில் வாசிக்கின்றோம். * **அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி** * இத்யாதி ச்லோகங்கள் பலர் அறிந்தனவே. அம்முனிவர் ஒரு ஜீவவ்யக்தியே யல்லது ஈச்வரனல்லர். இதனால் ஜீவகோடியிலேயே அதிசயித்த சக்தி படைத்த சிலர்க்கு விசித்ரஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ண ஆற்றலுண்டு என்பது தேறுகிறபடியால், கீழே காட்டிய அநுமானத்தினால் ஈச்வரனே ஜகஜ்ஜந்மாதிகாரணபூதனாக ஸித்திக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. விலக்ஷணசக்தியுக்தனான சேதநனே ஸ்ருஷ்டிகர்த்தாவாகத் தேறலாமாதலால் அநுமாநம் ஈச்வர ஸாதனத்தில் சக்தியுடையதன்று; ஆகவே சாஸ்த்ரமே பரப்ரஹ்மஸித்தியில் ப்ரபலப்ரமாணமாகக்கடவது. அப்படிப்பட்ட சாஸ்த்ரம் வேதாந்த சாஸ்த்ரமே. அதைக்கொண்டு ப்ரஹ்ம விசாரம் செய்வது நன்றாகப் பொருந்தும் என்றதாயிற்று. ... ... ... (3)

**சாஸ்த்ர யோநித்வாதிகரண ஸாரார்த்தம் முற்றிற்று.**

## 4. ஸமந்வயாதிகரணம்..

பரப்ரஹ்மமானது சாஸ்த்ரம்தவிர வேறொரு பிரமாணத்தினால் ப்ராப்தமாகக் கூடியதன்று என்றேகொண்டாலும் அந்த ப்ரஹ்மமானது ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு விஷயமல்லாமையினால் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தை ப்ரதிபாதநம் செய்வதில் பலனொன்று மில்லாமையினால் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் சாஸ்த்ரத்திற்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்கமாட்டாததலால் அந்த ப்ரஹ்மம் சாஸ்த்ர ப்ரதிபாத்யமாவதற்கு வழியில்லை என்றொரு ஆக்ஷேபம் தோன்ற, அதற்குப்பரிஹாரமாக இந்த அதிகரணம் அவதரிக்கின்றது.

**तत्तु समन्वयात् ॥ தத் து ஸமந்வயாத். 1—1—4**

இந்தஸூத்ரத்தில், **ப்ரஹ்மண:** என்றொருபதமும் **‘சாஸ்த்ரேண’** என்றொருபதமும் அத்யாஹாரம் செய்துகொள்ளவேண்டும். (அதாவது, வருவித்துக் கொள்ளவேண்டுமென்றபடி.)

http://acharya.org

தத்—கீழ்ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட சாஸ்த்ரப்ரமாணகத்வமானது என்றபடி.—ஸமந்வயாத்—நன்ருகப் புருஷார்த்தமாக அந்வயிக்கிறபடியினுல் என்றபடி. புருஷார்த்தத்வேந ஸம்பந்தமே ஸமந்வயமாவது. பரப்ரஹ்மமானது சாஸ்த்ரத்தினுல் புருஷார்த்தமாக ப்ரதிபாதிக்கப்படுகிறபடியினுலே அந்த ப்ரஹ்மத்திற்கு சாஸ்த்ரப்ரமாணகத்வம் ஸம்பவிக்கக் குறையில்லை என்றதாக ஸூத்ரத்தின் பொருள் தேறிற்று

இங்குப் பூர்வபக்ஷம்;—பரப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வேண்டுமானுல் அது வேறொரு ப்ரமாணத்தினுல் அறியப்படாமலிருக்கவேணு மென்பது தவிர மற்றொரு தன்மையும் அதில் இருக்கவேணும், அது என்னென்னில்; தெரிந்துகொள்ள விரும்பக் கூடியதாயிருத்தல் என்கிற தன்மையாம். தெரிந்துகொள்ளவேணு மென்கிற விருப்பம் எந்தவஸ்துவில் உண்டாகின்றதில்லையோ அந்தவஸ்துவைப்பற்றி சாஸ்த்ரம் ப்ரதிபாதநம் செய்யமாட்டாதன்றே. பரப்ரஹ்மம் இதரப்ரமாணத்தினுல் தெரிந்துகொள்ள முடியாததென்பதை ஒப்புக்கொள்வோம். தெரிந்துகொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிற தன்மை ப்ரஹ்மத்தினிடத்தில் இருக்கமுடியாதே ஏனென்னில்; தெரிந்துகொள்ளவேணு மென்கிற விருப்பமானது உலகில் ப்ரயோஜநவத்தான விஷயத்தில்தான் உண்டாகும். இஷ்டப்ராப்தி அநிஷ்டபரிஹாரம் என்கிற இரண்டோ இரண்டத்திலொன்றோ உலகில் ப்ரயோஜன மென்னத் தகுந்தது. இஷ்டப்ராப்தியானது ப்ரவ்ருத்தியினுலே விளையக்கூடியது. [யாகமென்கிற காரியத்தில் ப்ரவ்ருத்தியுண்டானுல் ஸ்வர்க்கமென்கிற இஷ்டம் ப்ராப்தமாகிறது.] ப்ரவ்ருத்தியினுல் இஷ்டப்ராப்தியாவதுபோல, நிவ்ருத்தியினுல் அநிஷ்டபரிஹார முண்டாகிறது. [மாம்ஸபக்ஷணமென்கிற காரியத்தில் நிவ்ருத்தியுண்டானுல் அநிஷ்டபரிஹார முண்டாகிறது.] ப்ரக்ருதத்தில், பரப்ரஹ்மமானது ப்ரவ்ருத்திக்கோ நிவ்ருத்திக்கோ இலக்கன்றே. (வஸ்துவே கண்ணுக்குத் தெரியாமையினுல்.) ஆகவே ப்ரயோஜநவத்த்வம் சொல்ல முடியாது. ஆதலால், தெரிந்துகொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிறதன்மை பரப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்க முடியாதாகையாலே அந்தப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்கவல்லதல்ல; ஆகவேசாஸ்த்ரத்தைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யப்புகுவது ஒவ்வாது—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக;

இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு;—பரப்ரஹ்மத்திற்கு ப்ரயோஜநாந்தரவத்த்வம் ஸம்பவியாமற்போனுலும், பலபலவேதாந்தவாக்யங்களினுல் அதுதானே ஸ்வயம் ப்ரயோஜநம்—பரமபுருஷார்த்தம் என்று அறிவிக்கப்படுகிறது. "புத்ரஸ் தே.ஜாத:" (உனக்குப் பிள்ளை பிறந்தது) என்றும், "தவ க்ருஹே நிதிரஸ்தி" (உன்வீட்டில் நிதியுள்ளது) என்றும் சொன்னுல் இந்தவாக்யங்களானவை பரமானந்தஹேதுவான புத்ரஜன்மத்தையும் நிதிஸத்பாவத்தையும் தெரிவிப்பதுபோல வேதாந்தவாக்யங்கள் பரமாநந்தஹேது பூதமும் பரமாநந்தஸந்தோஹஸ்வரூபமுமான பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதனம் பண்ணுவது ஸமஞ்ஜஸமேயாகும். அவை அபௌருஷேயங்களாகையாலே புருஷ புத்தியடியாக வரக்கூடிய ப்ரம ப்ரமாத விப்ரலிப்ஸைகள் அங்கு எண்ணத்தகாதவை. ஆகவே பொய்சொல்லி வஞ்சிக்கும் பேச்சுக்களல்ல வேதாந்த சாஸ்த்ரங்கள். அப்படிப்பட்டவற்றைக் கொண்டு ப்ரஹ்ம விசாரம் செய்வது பொருத்தமே யென்றதாயிற்று.

இந்த அதிகாணத்தின் ப்ரமேயத்தையுட்கொண்டு பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் (21) *அத்ராஸ்தே நிதிரிதிவத்...ரங்கேச த்வயி ஸகலாஸ் ஸமந்வயந்தே * என்கிற ச்லோகத்தையருளிச் செய்துள்ளார். அங்குளம்முடைய வியாக்கியானமும் நோக்கத்தக்கது ()

ஸமந்வயாதிகரணஸாரார்த்தம் முற்றிற்று.

சதுஸ்ஸூத்ரி முடிந்தது.

—[தொடரும்]—

http://acharya.org

ஸ்ரீ:

நித்யாநு ஸந்தேய ஸ்தோத்ரமாலையில்

**எம்பெருமானார் விஷயமான ஸ்தோத்ரங்கள்.**

# 1. தாடீபஞ்சகம்.

## धाटीपञ्चकम् ।

**ஸ்ரீகாஞ்சீ· அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன்.**

### அவதாரிகை.

ஐந்து ச்லோகங்கள் கொண்ட இந்த ஸ்துதி கூரத்தாழ்வானருளிச்செய்ததென்பர் சிலர்; ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலான ஐவர் [ஒவ்வொருவர் ஒவ்வொரு ச்லோகமாக] அருளிச்செய்த ஸ்துதியிது என்பர் வேறுசிலர். உண்மை எதுவாயினும் கர்ணாம்ருதமாக அமைந்த இந்த ஸ்தோத்ரம் பக்தர்களுக்கு நெடுங்காலமாக நித்யாநுஸந்தானத்தில் வந்திருப்பதால் இதன் பொருள் விவரிக்கப்படுகிறதிங்கு. எம்பெருமானாருடைய வெற்றிச் செல்வத்தைப் பேசுகின்ற ஐந்து ச்லோகங்கள் கொண்ட இந்த ஸ்துதிக்கு தாடீபஞ்சக மென்கிற திருநாமம் மிகப்பொருத்தமானது. ... *

पाषण्डद्रुमषण्डदावदहन श्चार्वाकशैलाशनिः बौद्धध्वान्तनिरासवासरपतिर्जैनेभकण्ठीरवः ।
मायावादिभुजङ्गभङ्गगरुडस्त्रैविद्यचूडामणिः श्रीरङ्गेशजयध्वजो विजयते रामानुजोऽयं मुनिः ॥१॥

*பாஷண்டத்ருமஷண்டதாவதஹநச் சார்வாகசைலாசநி:*
*பௌத்தத்வாந்தநிராஸவாஸரபதிர் ஜைநேபகண்டீரவ:,*
*மாயாவாதிபுஜங்கபங்ககருடஸ் த்ரைவித்யசூடாமணி:*
*ஸ்ரீரங்கேசஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம் முநி:.* (1)

பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: சார்வாக சைல அசநி: பௌத்தத்வாந்த நிராஸ வாஸரபதி: ஜைநஇப கண்டீரவ: மாயாவாதி புஜங்க பங்க கருட: த்ரைவித்ய சூடாமணி: ஸ்ரீரங்கேச ஜயத்வஜ: அயம் ராமாநுஜ: முநி: விஜயதே.

பாஷண்டர்களாகிற வ்ருக்ஷஸமூஹங்களுக்குக் காட்டுத்தீப்போன்றவரும், சார்வாக மதஸ்தர்களாகிற மலைகளுக்கு இடிபோன்றவரும், பௌத்தர்களாகிற இருளுக்கு இரவிபோன்றவரும், ஜைநர்களாகிற யானைகளுக்குச் சிங்கம்போன்றவரும், மாயாவாதிகளாகிற ஸர்ப்பங்களுக்குக் கருடன்போன்றவரும், பரமவைதிகர்களுக்குச் சிரோமணியானவரும், ஸ்ரீரங்கநாதனுடைய ஸர்வாதிசயங்களையும் சேமித்தருளினவருமான இந்த ஸ்ரீராமாநுஜமுனிவர் ஸர்வோத்கர்ஷசாலியாக விளங்குகின்றார்.

[பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந:] ஸ்ரீராமாநுஜ முநிக்கு ஏழு விசேஷணங்கள் இடப்படுகின்றனவிதில். * அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே * என்றும் * நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன * என்றும் * தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொல்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு

http://acharya.org

செய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே பொற்கற்பகம் எம்மிராமாநுசமுனி போந்தபின்னே * என்றும் சொல்லுகிறபடியே ஸகல துர்மதங்களையும் வேரோடுகளைந்தொழித்தவர் என்கிற பெருமை இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுகிறது. பரம நாஸ்திகர்கள் பாஷண்டரெனப்படுகிறார்கள். அவர்கள் பேர்க்கவும் பேராதபடி வேரூன்றிக்கிடந்தார்கள்; அன்னவர்களுக்கு ஸ்வாமிதாம் காட்டுத்தீப்போன்றவரென்கிறது முதல்விசேஷணத்தினால். காட்டுத்தீகதுவினால் எப்படிப்பட்ட மரங்களும் ஒரு நொடிப்பொழுதில் அவிந்தொழியுமோ; அப்படியே அவர்களையெல்லாம் அவலீலையாகத் தொலைத்தவர் என்றதாயிற்று.

[சார்வாக சைலாசநி:] கீழே பாஷண்டர்களென்று ஸாமாந்யசப்தத்தாலே சொல்லப்பட்டவர்கள் இனி விசேஷசப்தங்களாலே விவரிக்கப்படுகிறார்கள். சார்வாகர், பௌத்தர், ஜைநர், மாயாவாதிகள் என்று இங்கே விசிஷ்ய எடுத்துக் கூறப்படுமவர்கள், முதலிலே பாஷண்டர்களென்று சொல்லப்பட்டவர்களின் விவரண பூதர்களென்னவுமாம், சார்வாகாதிகளைப்போலே பாஷண்டர்கள் தனிப்பட்ட வகுப்பினர் என்னவுமாம். “**ப்ரத்யக்ஷமேகம் சார்வாக:**” என்கிறபடியே கண்ணால்கண்டதொன்றே ப்ரமாணமென்கிற சார்வாகமதஸ்தர்களாகிற மலைகளுக்கு அசநிபோன்றவர்ஸ்வாமி. வேறொன்றாலும் மாய்க்கமுடியாத மலைகளும் அசநியினால் க்ஷணமாய் மாய்ந்து போமிறே. முற்காலத்தில் இந்திரன் அசநியினால் மலைகளையெல்லாம் அறுத்தொழித்தானென்பதுண்டே.

[பௌத்தத்வாந்த நிராஸவாஸரபதி:] பௌத்தர்களாகிற இருளுக்குக் கதிரவன்போன்றவர் ஸ்வாமி? * கதிரவன் குணதிசைச் சிகரம்வந்தணைந்தான் * என்றவாறே * கனவிருளகன்றது * என்னவேண்டியதன்றோ. ஸூர்யோதயமானவாறே இருள்களெல்லாம் சிதைந்தோடுமாபோலே ஸ்வாமிதிருவவதரித்தவன்றே பௌத்தமதம் தொலைந்தொழிந்தது என்க.

[ஜைநேபகண்டீரவ:] ஜைநர்களாகிற மதயானைகளைமாய்ப்பதில் சீரியசிங்கமொத்தவர் ஸ்வாமி. சிங்கம் வாழ்கிற காட்டிலே யானைகள் தலைகாட்டமாட்டாதாப்போலே ஸ்வாமி ஸஞ்சரித்தருளுமிடத்தே ஜைநர்கள் தலைகாட்டமாட்டாதே பதுங்கிக்கிடந்தனர் என்றவாறு. * வலிமிக்க சீயமிராமாநுசன் * என்றார் அமுதனாரும்.

[மாயாவாதிபுஜங்கபங்க கருட:] * த்ருச்யம் மித்த்யா த்ருஷ்டிகர்த்தாச மித்த்யா தோஷோ மித்த்யா * என்றும் “ப்ரபஞ்சமெல்லாம் மாயாவிலஸிதம்” என்றும் சொல்லித்திரிகிற மாயாவாதிகளாகிற ஸர்ப்பங்களைப் பங்கம் செய்யும் விஷயத்தில் கருடனையொத்தவர் ஸ்வாமி. கருத்மானுடைய நிழல்பட்டாலும் அரவங்கள் மாய்ந்து போமாப்போலே ஸ்வாமியின் நிழல்பட்டாலும் மடிந்து போவர்கள் மாயாவாதிகள் என்றபடி.

[த்ரைவித்ய சூடாமணி:] ருக் யஜுஸ் ஸாமங்களாகிற மூன்று வேதங்களையும் பரமப்ரமாணமாகக்கொண்டு அவற்றிலே போதுபோக்குமவர்கள் **த்ரைவித்யர்க**ளெனப்படுவர்கள்; அப்படிப்பட்ட பரமைகாந்திகளுக்குச் சிரோபூஷணமாக விளங்குமவர் ஸ்வாமி. பரம வைதிகர்கள் குலாவும் பெருமானென்கை.

[ஸ்ரீரங்கேச ஜயத்வஜ:] * தென்னரங்கர் செல்வம் முற்றுந் திருத்திவைத்தான் வாழியே * என்றும் * மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள் * என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீரங்கஸ்ரீயை அநுதினம் அநுபத்ரவமாகச் சேமித்தருளின மஹாநுபாவராகையாலே ஸ்ரீரங்கேச ஜயத்வஜமென்று விருதுசாத்தப் பெற்றவர் ஸ்வாமி. ஆக இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த எம்பெருமானார் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்தருளாநின்றார் என்றதாயிற்று. ... ... ... (1)

पाषण्डषण्डगिरिखण्डनवज्रदण्डाः प्रच्छन्नबौद्धमकरालयमन्थदण्डाः ।
वेदान्तसारसुखदर्शनदीपदण्डाः रामानुजस्य विलसन्ति मुनेस्त्रिदण्डाः ॥२॥

http://acharya.org

**பாஷண்ட ஷண்ட கிரிகண்டந வஜ்ரதண்டா:**
**ப்ரச்சந்நபௌத்த மகராலய மந்ததண்டா:,**
**வேதாந்த ஸாரஸுகதர்சந தீபதண்டா:**
**ராமாநுஜஸ்ய விலஸந்தி முநேஸ் த்ரிதண்டா: (2)**

பாஷண்ட ஷண்ட கிரிகண்டந வஜ்ர தண்டா :, பரச்சந்ந பௌத்த மகராலய மந்ததண்டா :, வேதாந்தஸாரஸுகதர்சநதீபதண்டா: ராமாநுஜஸ்யமுநே: த்ரி தண்டா: விலஸந்தி.

பாஷண்டத்திரள்களாகிற மலைகளைக் கண்டிப்பதில் வஜ்ரதண்டம் போன்றவையும், வைதிகமதஸ்தர்க ளென்று சொல்லிக்கொள்ளுகிற ப்ரச்சந்நபௌத்தர் களாகிற கடல்களைக் கலக்குவதற்குரிய மத்துத் தடி கள் போன்றவையும், வேதாந்த ஸாரப்பொருள்களை எளிதாகக் காட்டும் தீபதண்டங்கள் போன்றவையு மான எம்பெருமானாரது த்ரிதண்டங்கள் அழகிய வாய் விளங்குகின்றன.

இந்த ச்லோகத்திலும் அடுத்த ச்லோகத்திலும் எம்பெருமானார் முன்கையிலேந் திய முக்கோல்தன்னழகு பேசப்படுகிறது திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்திலே * சிற்றெயிற்று முற்றல் மூங்கில் **மூன்றுதண்ட** ரொன்றினர் * என்றருளிச் செய்தபடியே த்ரிதண்டபரிமண்டிதராகவன்றோ ஸ்வாமி தாம் ஸேவைஸாதித்தது. அந்த த்ரிதண்டத்தின் பெருமை எப்படிப்பட்ட தென்னில் ; [**பாஷண்ட ஷண்ட கிரிகண்டந வஜ்ரதண்டா:**] பாஷண்ட ஷண்டங்களாகிற பெருமலைகளைக் கண்டித் தொழிப்பதிலே வஜ்ரதண்டங்கள் போன்றவையாம். எம்பெருமானார் பக்கலிலே சொல்லவேண்டிய பெருமையையே த்ரிதண் டத்தின்மேலேற்றிச் சொல்லுகிறது. இன்னமும் எப்படிப்பட்டவை யென்னில் ;

[**ப்ரச்சந்ந பௌத்த மகராலய மந்ததண்டா :**] சங்கரபாக்கரயாதவபாட்ட ப்ரபாகராதி கள் **ப்ரச்சந்ந பௌத்தர்க** ளெனப்படுகிறார்கள் ; பௌத்தர்கள் வெளிப்படையாகவே வேதங் களை அப்ரமாண மென்று பிதற்றிப் போந்தார்கள்; மற்றையோர்கள் அங்ஙனன்றிக்கே வேதங் களை ப்ரமாணமாக இசைந்துவைத்தும் தத்வஹித புருஷார்த்தங்களின் உண்மைஸ்வரூப விளக்கத்தில் மாழாந்தொழிந்தார்களாதலால் இவர்களையும் ஒருபடி பௌத்தர்களென்றே சொல்லலாமென்றும், "அவர்கள் ப்ரகாச பௌத்தர்கள், இவர்கள் ப்ரச்சந்ந பௌத்தர்கள்" என்றும் பெரியார் வழங்கிவந்தனர். ஸங்கல்பஸூர்யோதயத்தில் * **யதி பாஸ்கரயாதவப்ர காசேள*** என்று தொடங்கிச் சொன்ன ச்லோகம் இங்கே அநுஸந்தேயம். அப்படிப்பட்ட * மாயோபாதிவிகார ஸங்கரகதாகோலாஹலிகளாகிற கடலைக் கலக்குவதற்கு மத்துத்தடி போன்றதாம் ஸ்வாமியின் த்ரிதண்டம். த்ரிதண்டதாரியான ஸ்வாமி ப்ரச்சந்ந பௌத்தர் களை யெல்லாம் பாற்றியருளினர் என்றவாறு.

[**வேதாந்த்ஸார ஸுகதர்சந தீபதண்டா:**] த்ரிதண்டம் இன்னமும் எப்படிப்பட்ட தென்னில் ; வேதாந்த விழுப்பொருள்களானவை இவ்விருள்தருமாஞாலத்தவர்க்குப் புலப் படாதபடிகிடக்க, அவற்றை எளிதாகவும் ஸுவ்யக்தமாகவும் காண்பதற்கு ஏற்றப்பட்ட தீபதண்டங்களோ இவை ! என்னும்படியாகவுள்ளன. த்ரிதண்டதாரியான நம் ஸ்வாமி யொருவரே வேதாந்த தத்வார்த்தங்களையெல்லாம் உள்ளவாறு கண்டு வெளியிட்டருளின வர் என்றதாயிற்று. * நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது * என்ற அமுதனார் பாசுரம் இங்கே அநுஸந்தேயம். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானார்த்ரிதண்டம் "ஐங் கோலுமொருகோலும் நீக்கோலம்போல்" என்று பிள்ளைப்பெருமாளையங்கார் பணித்த படியே பஞ்சபாணனுடைய ஆஜ்ஞையையும் ஏகதண்டிகளினுடைய ஆரவாரத்தையுமொழித் துச் செங்கோல் செலுத்தி விளங்காநின்றது என்றதாயிற்று. ... (2)

**चारित्रोद्धारदण्डं चतुरनयपथालंक्रियाकेतुदण्डं सद्विद्यादीपदण्डं सकलकलिकथासंहृतेः कालदण्डम् ।**
**त्रय्यन्तालम्बदण्डं त्रिभुवनविजयच्छत्रसौवर्णदण्डं धत्ते रामानुजार्यः प्रतिकथकशिरोवज्रदण्डं त्रिदण्डम् ॥३॥**

http://acharya.org

**சாரித்ரோத்தாரதண்டம் சதுரநயபதாலங்க்ரியாகேதுதண்டம்**
**ஸத்வித்யாதீபதண்டம் ஸகலகலிகதாஸம்ஹ்ருதே:காலதண்டம்,**
**த்ரய்யந்தாலம்பதண்டம் த்ரிபுவநவிஜயச்சத்ரஸௌவர்ணதண்டம்**
**தத்தே ராமாநுஜார்ய: ப்ரதிகதகசிரோவஜ்ரதண்டம் த்ரிதண்டம். (3)**

சாரித்ர உத்தாரதண்டம், சதுரநயபத அலங்க்ரியா கேதுதண்டம், ஸத்வித்யாதீபதண்டம், ஸகலகலிகதாஸம்ஹ்ருதே: காலதண்டம், த்ரய்யந்த ஆலம்பதண்டம், த்ரிபுவநவிஜயச்சத்ர ஸௌவர்ணதண்டம், ப்ரதிகதகசிரோ வஜ்ரதண்டம், த்ரிதண்டம் ராமாநுஜார்ய: தத்தே.

நன்னடத்தைகளை உத்தாரம் செய்யவல்ல வேத்ர தண்டம் போன்றதும், நல்ல நீதிமார்க்கத்தை அலங்கரிக்கவல்ல த்வஜதண்டம் போன்றதும், ஸத்வித்யா முதலான வேதாந்த வித்யைகளை நன்கு காண்பதற்குரிய தீபதண்டம்போன்றதும், ஸகலவித கலிகோலாஹலங்களையும் ஸம்ஹரிப்பதற்குரிய யமதண்டம் போன்றதும், தளர்ந்த வேதாந்தங்களுக்குக் கைப்பிடி கொடுக்கவல்ல தடிபோன்றதும், மூவுலகங்களையும் வென்று தாங்குகின்ற கொற்றக்குடைக்கு ஸ்வர்ணதண்டம் போன்றதும், ப்ரதிவாதிகளின் தலைமேல்விழும் வஜ்ரதண்டம்போன்றதுமான திவ்யத்ரிதண்டத்தை ஸ்வாமிதாம் திருக்கையில் ஏந்தியுள்ளார்.

இந்த ச்லோகமும் த்ரிதண்டத்தின் பெருமைகூறுவது. உல்லேகாலங்காரரீதியில் பணிச்கிறபடி. [ராமாநுஜார்ய: த்ரிதண்டம் தத்தே] எம்பெருமானார் "முக்கோல்பிடித்த முனி" யென்று உலகம்போற்ற த்ரிதண்டத்தைத் திருக்கையிலேந்தி விளங்குகின்றார்; அந்தத்ரிதண்டமெப்படிப்பட்டதென்னில்; [சாரித்ரோத்தாரதண்டம்] நல்ல அனுஷ்டானங்களைப் பயில்விப்பதற்குக் கையிலேந்திய வேத்ரதண்டமோ இது! என்னலாயிருந்தது. உலகில் உபாத்யாயர்கள் சிஷ்யர்களுக்கு ஜ்ஞாநாநுஷ்டானங்களை சிக்ஷிப்பதற்குக் கையிலே வேத்ரதண்டத்தை வைத்திருப்பதுண்டே.

[சதுரநயபதாலங்க்ரியாகேதுதண்டம்] உபயமீமாம்ஸைகளிலும் பலபல நியாயங்கள் தேறியிருப்பதுண்டே; அவற்றை இதரர்கள் பாழ்படுத்திப் போந்தனர்; அப்படியன்றிக்கே ஸ்வாமி அந்தநியாயங்களையெல்லாம் சிறிதும் நிலைகுலையாமே ஸம்ரக்ஷிதமாக்கியருளினராதலால் அப்படிப்பட்ட ந்யாயமார்க்கங்களையலங்கரிப்பதற்கு நாட்டியிட்ட த்வஜதண்டமோ இது! என்னலாயிருந்தது. இத்தால் ஸ்வாமி ந்யாயமார்க்க ப்ரதிஷ்டாபகர் என்றதாகும்.

[ஸத்வித்யாதீபதண்டம்] வேதாந்தத்தில் ஸத்வித்யா, அக்ஷிவித்யா, வைச்வாநர வித்யா, உபகோஸலவித்யா என்று பலவித்யைகள் ஓதப்படுகின்றன; அவற்றுக்குத் தீபதண்டமென்னலாம்படியுள்ளது. ஸ்வாமி அந்த வித்யைகளையெல்லாம் ப்ரகாசிப்பித்தருளினவர் என்றவாறு. அன்றிக்கே, **ஸத்வித்யா** என்று மிகவுயர்ந்த வித்யையான உபநிஷத்தைச் சொன்னதாகவுமாம். * **ஸா வித்யா யா விமுக்தயே** * என்கிற பிரமாணப்படியே மோக்ஷ ஸாதனமான வித்யைதானே ஸத்வித்யை.

[ஸகலகலிகதாஸம்ஹ்ருதே: காலதண்டம்] * கடலளவாய திசையெட்டினுள்ளுங் கலியிருளே மிடைதரு காலத்திலே மிக்கநான்மறையின் சுடரொளியால் அவ்விருளைத் துரந்தவர் ஸ்வாமியேயன்றோ. * கலியுங்கெடுங் கண்டுகொண்மின் * என்றவிடத்து ஐதிஹ்யமுங் காண்க. கலிகோலாஹலங்களெல்லாவற்றையும் ஸம்ஹரிப்பதில் காலதண்டம் போன்றதாம். **ஸம்ஹ்ருதே:** என்றும் பாடமுண்டு.

[த்ரய்யந்த ஆலம்பதண்டம்] * பிபேதி அல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி* என்கிறபடியே அபார்த்தஞ் சொல்லும் குத்ருஷ்டிகள் விளைத்த கஷ்டங்களினால் தளர்ந்து போன வேதாந்தபுருஷனுக்குக் கைப்பிடிகொடுத்துக் கஷ்டந் தீர்க்கும் தண்டமோவிது! என்னலாம்படியுள்ளது.

http://acharya.org

15 C. Manavalla Naicker, 6, Guruvappa Chetty St. Chintadripet, Madras
16 M. V. K. Purushotham Mudaliar, 14, Venkatachala Mudaly St. Madras
17 A. Padmavathiammal, 12, Seenu Mudaly St. Madras
18 V. Parthasarathy Pillai, 125, Amman Koil St. Madras
19 C. R. Balakrishna Naicker, 81, Sengulneer Pillair Koil St. Madras
20 C. Ellumalai Chetty, 40, Balakrishna Mudaly St. Madras
21 Kannappa Chetty, 2, Company Choultry St. Old Washermanpet, Madras
22 N. Sreenivasulu Chetty, 318, Mint St. Madras
23 C. Radakrishna Mudaliar, 358, Mint St. Madras
24 A. Mangallammal, 16, Vinayaga Maistry St. Madras
25 C. R. Narasimhachariar, 48, Venkatramier St. Madras

**Life Members**

1 V. C. Chekrapani Chetty, 8, Kavarai St. Siadapet, Madras
2 W. Rajaram Naidu, 16, Alligiri Naicken St. Allandoor
3 G. Vedachellam Chetty, Stroten Muthia Mudaly St. Madras
4 T. V. Brahmanandam Chetty, 41, do.

### ஸ்ரீ ராமாநுஜன் பத்திரிகைக்காக ரூ. 4 சந்தா வரவுகள்

29 C. வரதராஜுலு நாயுடு, வன்னியதேனாம்பேட்டை
30 T. K. ஸ்ரீநிவாஸய்யங்கார், தில்லையம்பூர்
31 T. R. கிருஷ்ணசாமி அய்யங்கார், ஸ்ரீரங்கம்
32 R. ஸ்ரீநிவாஸவரதய்யங்கார், ரிடைர்ட். தாசில்தார், மதுரை
33 B. சந்த்ரகுப்தா, பி. ஏ., ஜி. டி. மதராஸ்
34 R. V. K. சாரியார், புதுடில்லி
35 L. S ஸ்ரீநிவாஸாசாரியர், ஆழ்வார் திருநகரி
36 சொகுசு. தேவராஜய்யங்கார் ஷை
37 நிம்மப்ப. ஆத்தாணையங்கார் ஷை
38 பெ. தொண்டரடிப்பொடி நாயுடு, தச்சநல்லூர்
39 பா. நந்தகோபாலக் கோனூர், தச்சநல்லூர்
40 செல்வநம்பி நாயுடு, தச்சநல்லூர்
41 கூரத்தாழ்வார் கோன், திருநெல்வேலி டவுன்
42 ராமாநுஜக்கோனூர், பாளையங்கோட்டை
43 K. RM. ராமசாமி செட்டியார், கண்டரமாணிக்கம்
44 VE. RM. K. கிருஷ்ணன் செட்டியார், அரியக்குடி
45 ராம. அரு. அரு. ராம. அரு. ராமநாதன் செட்டியார், தேவகோட்டை
46 S. S. N. L. நாராயணன் செட்டியார், பகமலை

http://acharya.org

Regd. No. M. 5297

## சேலம் மெம்பர்கள்

47 N. T. ராமஸ்வாமி அய்யங்கார்

48 C. அனந்தாசாரியார், வக்கீல், 2-வது அக்ரஹாரம், சேலம்

49 S. T. ஸ்ரீனிவாசய்யங்கார், P. A. to D. S. P. Malabar Calicut

50 மாணிக்க நாயக்கர், மளிகை, செவ்வாய்ப்பேட்டை

51 குமாரசாமி செட்டியார், வக்கீல், செவ்வாய்ப்பேட்டை

52 S. N. பத்மனாப செட்டியார், பட்டு ஜவுளி வியாபாரம், சேலம்

53 ராமானுஜய்யங்கார் கோவாபிரேடிவ் சப்ரிஜிஸ்டார்

---

**If un-delivered please return to:-**

**P. B. Annangaracharyar, Conjeevaram.**

Edited Printed & Published by S. R. Varadarajan, B. A., for
Madras Sathgrantha Prakasana Sabha, at Sri Lakshmi Printing Works,
Car Street, Salem. Editor: P. B. Annangaracharya Swami.

http://acharya.org